சனி | சித்திரை 1     📖 மாலை வாசகம் – யோவான் 16:13

# கற்றுக் கொள்ள ஆயத்தமா?

ஒரு கிராமத்திலே வசித்து வந்த இளைஞனொருவன், அருகிலுள்ள பட்டணத்திலே நடைபெறும் நீச்சல் பந்தையப்போட்டியை பார்க்க சென் றிருந்தான். அந்தப் பந்தையப் போட்டியிலே போட்டியிடும் வீரர்களின் நீச்சல் திறனைக் கண்டு, அதிசயித்த அவன், தானும் நீச்சல் கலையை கற்றுக்கொள்ள வேண்டும் என்று தன் மனதிலே உறுதியான தீர்மானம் செய்து கொண்டான். கிராமத்தி ற்கு திரும்பிய அவன், தன் அய லிலே வசித்து வந்த நீச்சல் கலை யை அறிந்த ஒருவரிடம் சென்று, தனக்கு நீந்த கற்றுக் கொடுக்கு ம்படி கேட்டுக் கொண்டான். அவ ரும், அந்த கிராமத்திலுள்ள ஆற் றிலே, அவனுக்கு ஆரம்ப நீச்சல் கலையை கற்றுக் கொடுத்து வந் தார். அந்த இளைஞனும் அனுதினமும், தான் கற்றுக் கொண்டதை விடா முயற்சியுடன் பயிற்சி செய்து நீச்சல் கலையிலே முன்னேறி வந்தான். ஆம் பிரியமானவர்களே, ஒருவன் ஒரு காரியத்தை கற்றுக் கொள்ள வேண்டுமாயின், 1. கற்றுக் கொள்ளப்போகின்றேன் என்ற தீர்மானம் மன திலே உண்டாக வேண்டும். 2. அந்த காரியத்தை கற்றுக் கொடுக்க ஒரு பயிற்சியாளர் இருக்க வேண்டும். 3. கற்றுக் கொண்டவைகளை தவ றாமல் பயிற்சி செய்ய வேண்டும். தேவ ஊழியராகிய பவுல், தன்னு டைய அனுபவங்களை குறித்து கூறும் போது, நான் எந்த நிலைமை யிலிருந்தாலும் மனரம்மியமாயிருக்கக் “**கற்றுக்கொண்டேன்**” என்றும், தாழ்ந்திருக்கவும் எனக்குத் தெரியும், வாழ்ந்திருக்கவும் எனக்குத் தெரி யும் எவ்விடத்திலும் எல்லாவற்றிலும் திருப்தியாயிருக்கவும் பட்டினி யா யிரு க்கவும், பரிபூரணமடையவும் குறைவுபடவும் “**போதிக்கப்பட்டேன்**” என்றும் கூறியிருக்கின்றார். நாம் எந்த வயதுடையவர்களானாலும் கிறி ஸ்துவோடு வாழும் வாழ்க்கையிலே, அனுதினமும் நாம் கற்றுக் கொள் ளும்படிக்கு நம்மை நாம் தாழ்த்த வேண்டும். போதக சிட்சையை அற்ப மாக எண்ணாமல், கிறிஸ்துவின் சாயலையடைய முடியாதபடிக்கு தடையாக இருக்கும் சுபாவங்களை நாம் மாற்றிக் கொள்ள வேண்டும். நம்முடைய சுயபெலத்தினால் உண்டாகும் பலன் அற்பமே. ஆனால், நாம் நம்மை நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வழியில் வாழ நம்மை ஒப்புக் கொடுத்து, மனத் தாழ்மையோடு போதனைகளை ஏற்றுக் கொண்டு நடக்கும் போது, அவர் நமக்கு பெலன் தந்து வழிநடத்திச் செல்வார்.

**பிலிப்பியர் 4:13**

என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லா வற்றையுஞ்செய்ய எனக்குப் பெலனுண்டு.

**ஜெபம்:** கற்றுத் தந்து நடத்தும் தேவனே, எந்த சூழ்நிலையும் என்னை மேற்கொள்ளாதபடிக்கு, நான் உம்மிலே நிலைத்திருக்கும்படிக்கு உம்மு டைய வார்த்தையின் வழியிலே வாழ நடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# உன் ராஜா உன்னிடத்தில் வருகிறார்

ஒரு தேசத்தை ஆட்சி செய்து வந்த ராஜாவிற்கு குமாரனொருவன் இருந்தான். அந்த ராஜ குமாரனானவன், தன் சிறிய பிரயாத்திலிருந்து, ராஜ்யத்தின் தலைநகருக்கு பல முறை இளவரசனுடைய மகிமையோடு சென்று வந்தான். அவன் வளர்ந்து பெரியவனாகிய போது, வழமை போல வருடாந்தம் தலைநகருக்கு செல்ல ஆயத்தப்பட்டான். ஆனால், தலைநகரை முற்றுகையிட எதிரிகள் சதி செய்திருக்கின்றார்கள் என்ற செய்தி ராஜாவிற்கு வந்தது. தன்னுடைய குமாரானானவன், அந்த யுத்தத்தை நடத்த வல்லவனாக இருந்த போதும், தன் குமாரனானவனுக்கு ஆபத்தானது நேரிடக் கூடாது என்பதற்காக தன் குமாரனுக்கு பதிலாக, வேறு ஒரு மந்திரியை அங்கே அனு ப்பி வைத்தார். ஏன் அந்த ராஜா அப்படிச் செய்தார்? ராஜாவாகிய தந்தையானவர், பதினாயிரம் படைகளை தான் இழந்து போனாலும், அதி சிறந்த மந்திரிகள் மரித்துப் போனாலும், தன் ராஜ குமாரனானவனுக்கு எந்தக் கஷ்டமோ, அவமானமோ வருவது நல்லதல்ல என்று அவனை தன் அரண்மனையிலே வைத்திருந்தார். பிரியமானவர்களே, நம்முடைய பரம தந்தையாகிய தேவனோ, தம்முடைய ஒரே பேறான குமாரனாகிய மீட்பர் இயேசுவை நமக்காக இந்த உலகத்திற்கு அனுப்பினார். திருக்குமாரனாகிய இயேசுவோ, தான் வளர்ந்து வந்த நாசரேத் என்னும் ஊரிலிருந்து, பலமுறை தலைநகராகிய எருசலேமிற்கு சென்றிருந்தார். ஆனால், இந்தமுறை அவர் ஏறத்தாழ33வயதுடையவராக எருசமேலிற்குவருகை தருகின்றார். உலகம் முழுவதும் பாவத்தில் மரித்து, நித்திய ஆக்கினையை அடையாமல், அடைபட்டிருக்கும் பரலோகத்தின் வாசலை திறக்க தன் ஏகசுதனான இயேசு பல பாடுகள் படவும், மூப்பராலும் பிரதான ஆசாரியராலும் வேதபாரகராலும், சொந்த ஜனங்களாலும் ஆகாதவனென்று தள்ளப்படவும், அவமானமும், நிந்தையை அடையவும், கோரமான மரணத்தை சந்திக்கவும் வேண்டும் என்று சர்வ வல்லமையுள்ள பரமபிதாவானவர் அறிந்திருந்தார். இன் னும் சில நாட்களிலே, தான் தன்னை பாவ நிவாரண பலியாக ஒப்புக் கொடுக்க வேண்டும் என்று பரலோகத்தின் செல்லப் பிள்ளையாகிய இயேசுவும் அறிந்திருந்தார். அதற்காக இந்த உலகத்திற்கு வந்தேன் என்றவர், தாழ்மையோடு எருசலேமிற்கு வருகை தந்த நாளை இன்று நாம் நினைவு கூருகின்றோம்.

**சகரியா 9:9**

**அவர் நீதியுள்ளவரும் இரட்சிக்கிறவரும் தாழ்மையுள்ளவரும், கழுதையின்மேலும் கழுதைக்குட்டியாகிய மறியின் மேலும் ஏறிவருகிறவருமாயிருக்கிறார்.**

**ஜெபம்:** பரலோக பிதாவே, உம்முடைய திருச்சித்தம் நிறைவேறும்படி, தம்மை ஒப்புக்கொடுத்த உம்முடைய குமாரனைப் போல, நானும் மனத்தாழ்மையுடையவனாக உம் சித்தத்தை நிறைவேற்ற எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# நாம் ராஜாக்களும் ஆசாரியர்களும்

ஒரு நாட்டின் இளவரசன், வளர்ந்து பெரியவனான போது, ராஜ குலத்தின் பிறப்புரிமையால் தனக்கு உண்டாயிருக்கும் கனத்தையும், மகிமையையும், வல்லமையையும். ஐசுவரியத்தையும் கண்டு பெரு மகிழ்ச்சியடைந்தான். தன் விவகாரங்களை நேர்த்தியாக கவனிப்பதற்கு ஊழியகாரர்களும், ஊழியக்காரிகளும் ஏராளமாக இருக்கின்றார்கள். இப்படிப்பட்ட சிலாக்கியத்தை பெற்ற நான் பாக்கியம் பெற்றவன் என்று தனக்குள்ளே எண்ணிக் கொண்டான். ஒருவேளை அந்த இளவரசன், தேசத்தின் குடிகளுக்கு அவ்வப்போது தன் இரக்கத்தையும், மனதுருக்கத்தையும் சில செயல்கள் வழியாக காண்பிக்கலாம். ஆனால், நம்முடைய தேவ குமாரனாகிய ஆண்டவர் இயேசு கிறிஸ்து, வல்லமையையும் ஐசுவரியத்தையும் ஞானத்தையும் பெலத்தையும் கனத்தையும் மகிமையையும் உடையவராக, தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார். அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார். மனித குலம் நித்திய ஆக்கினைக்குள் அழிந்து போகாமல், நித்திய ஜீவனைப் பெறும்படி அப்படிச் செய்தார். நம்மிடத்தில் அன்புகூர்ந்து, தமது இரத்தத்தினாலே நம்முடைய பாவங்களற நம்மைக் கழுவி, தம்முடைய பிதாவாகிய தேவனுக்கு முன்பாக நம்மை ராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கினார். எனவே நாமும், ஆசீர்வாதம் என்ற போர்வையின் கீழே, இந்தப் பூவுல பொக்கிஷங்களால் உண்டாகும் சௌகரியம் நிறைந்த வாழ்க்கையை வாஞ்சித்து அதன் பின் தொடராமல், கிறிஸ்துவின் சிந்தையைத் தரித்தவர்களாக, அவரைய பின்பற்றிச் செல்வோமாக. அவர் எப்படியாக சுயநலமற்ற தியாகமான வாழ்க்கையை இந்தப் பூவுலகிலே வாழ்ந்து காட்டினாரோ, அதுபோல நாமும், நமக்குரியவைகளையல்ல, பிறருக்கானவைகளையும் நோக்குவோமாக. நித்திய பேரின்பத்திலே பிரவேசித்து, மகிமையின் கீரிடத்தை சூடும் நாள்வரைக்கும், கிறிஸ்துவின் நல்ல ஸ்தானாதிபதிகளாக வாழ்ந்து இந்த உலகத்திலே அவரை, நம் வாழ்கை வழியாக மற்றவர்களுக்கு வெளிப்படுத்துவோமாக.

**யோவான் 12:26**

**ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்கிறவனானால் என்னைப் பின்பற்றக்கடவன்,நான்எங்கே இருக்கிறேனோ அங்கே என் ஊழியக்காரனும் இருப்பான்**

**ஜெபம்**: தம்முடைய சித்தத்தின்படி விருப்பத்தையும் செய்கையையும் என்னில் உண்டாக்குகிறவராயிருக்கின்ற தேவனே, நான் மகிமையில் சேரும் நாள்வரைக்கும் மனத்தாழ்மையோடு பணி செய்ய கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# சாட்சியுள்ள வாழ்க்கை

கம்பனியொன்றிலே சிறப்பான பதவி வகித்துவந்த விசுாவாசியொருவன், தனக்கு கிடைத்த உத்தியோகத்தைக் குறித்து சபையிலே சாட்சி பகிர்ந்தான். ஆனாலும், தன்னை யார் என்பதை சிரேஷ்ட நிர்வாகிகளுக்கு காண்பிக்க தயக்கமுடையவனாக இருந்து வந்தான். தான் கிறிஸ்தவன் என்பதையம், ஆலயத்திலே ஊழியங்களிலே உதவி வருவதை தனக்கொத்தவர்கள் அறிந்தால், தன்னை அற்பமாக எண்ணுவார்கள். வேலையாட்கள் மத்தியிலே அவமானமடைய வேண்டி வரும் என்று தனக்கு கிடைத்த நல்ல சந்தர்பங்களிலும், தன் விசுவாசத்தை வெளிப்படுத்தாமல் இருந்து விட்டான். ஒருவன் உண்மையிலே கிறிஸ்துவினுடையவனாக இருந்தால், அவன் மேலானவைகளை தேடுகின்றவனாக இருப்பான். இந்த உலகிலே அவமானம் நிந்தை வந்தாலும், தனக்கென வைக்க ப்பட்டிருக்கும் நித்திய வாழ்வைக் குறித்த சந்தோஷம் அவனுக்குள் எப்போதும் இருக்கும். தன்னை கிறிஸ்தவன் என்று வெளிப்படுத்தினால், இனி பதவி உயர்வுகள் கிடைப்பது அரிதாக இருக்கும். அநேகர் என்னோடு நட்பாக இருக்க விரும்ப மாட்டார்கள் என்று எண்ணுகின்றவன், சாட்சியற்ற வாழ்க்கையை வாழ்கின்றவனாக தனக்கு கிடைத்த சந்தர்ப்பத்தை போக்கடிக்கின்றான். நம்முடைய மீட்பராகிய இயேசு, தமக்கு முன் வைத்திருந்த சந்தோஷத்தின்பொருட்டு, அவமானத்தை எண்ணாமல், சிலுவையைச் சகித்து, தேவனுடைய சிங்காசனத்தின் வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறார். ஆனால் இன்று அழைப்பைப் பெற்ற சில தேவ பிள்ளைகளும் கூட, இந்தப் உலகத்தினால் உண்டாகும் அழிந்து போகும் மகிமையை மேன் மையாக கருதி, அதை அடையும்படிக்கு பிதாவின் நாமத்திற்கு உண்டாகும் மகிமையை தள்ளிவிடுகின்றார்கள். கிறிஸ்து இயேசுவுக்காக தாங்கள் கடுகளவும் அவமானம் அடைவதை விரும்புவதில்லை. நம்முடைய ஆண்டவராகிய இயேசுவோ, சிலுவை மரணத்திற்கு தன்னை ஒப்புக் கொடுக்கும்படி எருசலேமிற்கு வந்த நாட்களிலே, ஜனங்கள் மத்தியிலே நின்று: இப்பொழுது என் ஆத்துமா கலங்குகிறது, நான் என்ன சொல்லுவேன். பிதாவே, இந்த வேளையினின்று என்னை இரட்சியும் என்று சொல்வேனோ. ஆகிலும், இதற்காகவே இந்த வேளைக்குள் வந்தேன். பிதாவே உம்முடைய நாமத்தை மகிமைப்படுத்தும் என்று தன்னை ஒப்புக் கொடுத்தார். நாமும் அதே சிந்தையை தரித்தவர்களாக நம்மை ஒப்புக் கொடுப்போமாக.

**யோவான் 12:28**

**பிதாவே, உமது நாமத்தை மகிமைப்படுத்தும் என்றார்.**

**ஜெபம்:** பிதாவாகியதேவனே, எனக்கு கிடைக்கும் அருமையான வேளையை நான் வீணாக்காமல், உம்முடைய நாமம் மகிமைப்படும்படிக்கு சாட்சி பகரும் வாழ்க்கை வாழ எனக்கு நீர் பெலன் தந்து நடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# உணர்வுள்ள இருதயம் தேவை

ஒருமுறை, இருமுறையல்ல, எத்தனை நன்மைகள் செய்தாலும், நல்ல துக்கு காலம் இல்லை. தாம் பெற்றவைகளைக் குறித்த நன்றியறிதலுமி ல்லை, அப்பா எப்படியாவது தேவைகளை சந்திப்பார் என்ற நம்பி க்கையுமில்லை என்று தன் குடும்பத்தின் நிலைமையைக் குறித்து ஒரு தகப்பனானவர் தன் மேய்ப்பனிடம் கூறினார். இவ்வண்ணமாக தீர்க்க தரிசியாகிய மோசேயின் நாட்களிலே, தேவனுடைய ஜனங்கள், எகிப்திலும், வனாந்திரத்திலும், கர்த்தரின் அதிசய மான செயல்களையும், அற்புத அடை யாளங்களையும், பல முறைகள் கண் ணாரக்கண்டும், தேவனாகிய கர்த்தர் மேல் விசுவாசம் வைக்காமல், நன்றி யற்றவர்களாக அவரை பத்துமுறை பரீட்சை பார்த்தார்கள். தேவனாகிய கர்த்தரால் உண்டாகும் இளைப்பாறுதலை வெறுத்துத் தள்ளி, அழிவை தங்களுடையதாக்கிக் கொண்டார்கள். அவ்வண்ணமாகவே, ஆண்டவ ராகிய இயேசு இந்த உலகத்திலே வாழ்ந்த நாட்களிலும், அவர் ஜன ங்கள் முன்னிலையில், உலகமுண்டானதுமுதல் மனிதர்கள் காணாத எத் தனையோ அற்புதங்களை அவர்களுக்கு முன்பாகச் செய்திருந்தும், அவர்களோ அவரை விசுவாசிக்கவில்லை. வேத வாக்கியங்களை ஆரா ய்ந்து பார்த்து, தங்கள் முன்னிலையிலே நிற்பவர் வாக்களிக்கப்பட்ட மீட்பர் என்பதை அறிந்து கொள்ள மனதில்லாமல், உணர்வற்ற வாழ் க்கை வாழும்படிக்கு தங்கள் இருதயத்தை தாங்களே கடினப்படுத்திக் கொண்டார்கள். பிரியமான சகோதர சகோதரிகளே, நம்முடைய கர்த் தராகிய இயேசுவின் பாடுகளை அதிகதிகமாக தியானம் செய்யும் இந்த பரிசுத்த வாரத்திலே, நாம் நம்முடைய இருதயத்தின் நிலைமையை கர்த்தருடைய வார்த்தையின் வெளிச்சதில் ஆராய்ந்து அறிந்து கொள்ள வேண்டும். நாம் தேவனிடத்திலிருந்து பெற்றுக் கொண்ட ஞான நன் மைகளை அற்பமாக எண்ணி, அவைகளைத் தள்ளிப்போடாமல், பெற்ற நன்மைகளுக்கு நன்றியறிதலுள்ளவர்களாக இருக்க வேண்டும். அந்த நன்றியானது, நாம் தேவன்மேல் கொண்ட விசுவாசத்தை இன்னுமாய் உறுதிப்படுத்த வேண்டும். வாழ்க்கையிலே போராட்டங்கள் சூழ்ந்து கொள்ளும் போது, விசுவாச அறிக்கையிலே உறுதியாய் நிலைத்திரு ங்கள். அந்த நாட்களிலே அழைப்பைப் பெற்ற ஜனங்களில் பலர் மதியீனராக இருந்தது போல, நாமும் இந்த நாட்களிலே இருக்காமல். உணர்வுள்ளவர்களாக கர்த்தரிலே நிலைத்திருப்போமாக.

**யோவான் 12:37**

**அவர் இத்தனை அற்புத ங்களை அவர்களுக்கு முன்பாகச் செய்திருந்தும், அவர்கள் அவரை விசுவா சிக்கவில்லை.**

**ஜெபம்:** இருதயங்களை பிரசகாசிப்பிக்கின்ற தேவனே, நான் உணர்வற்ற வாழ்க்கை வாழாதபடிக்கு, எப்போதும் நன்றியறிதலுள்ளவனாக, உம்மை நம்பி, உம்மையே சார்ந்து வாழும் வாழ்க்கை வாழ எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# விசுவாச அறிக்கை

நம்முடைய வாழ்க்கையிலே பல சத்தங்கள் எங்கள் காதுகளிலே ஒலிக்கின்றது. பெற்றோரின் சத்தம், பிள்ளைகளின் சத்தம், கணவன், மனைவி, சகோதரர்கள், உறவினர்கள், நண்பர்கள், வேலை செய்யும் இடங்களிலே இயக்குனர், சக ஊழியர்களின் சத்தங்கள் கேட்கின்றன. நாளாந்த வாழ்க்கை, விசேஷித்த கொண்டாட்ட தினங்கள், திருநாட்கள், பெருநாட்கள், துக்கங் கொண்டாடுதலின் நாட்கள் என்று பல சம்பவங்கள் மத்தியிலும் இந்த சத்தங்கள் பலவிதமாக கேட்கின்றது. இப்படியாக பல சத்தங்கள் மத்தியிலும், மேட்டிலும் பள்ளத்தாக்கிலும் நம்முடைய மேய்ப்பராகிய இயேசுவின் சத்தமும் தொனிக்கின்றது. இந்த சத்தங்களிலே நாம் எந்த சத்தத்தை நம் வாழ்க்கையிலே மேன்மைப்படுத்துகின்றோம் என்பதை நாம் ஆராய்ந்து நம் நிலைமையை அறிந்து கொள்ள வேண்டும். எடுத்துக்காட்டாக, மேய்ப்பராகிய இயேசுவின் சத்தம் தொனிக்கின்ற வேளையிலே, வேலை தளத்திலே இயக்குனரின் சத்தம் அதற்கு விரோதமாக கேட்கின்றது. ஆண்டவர் இயேசுவின் சத்தத்திற்கு செவி கொடுத்தால், இயக்குனரின் நன்மதிப்பை இழக்க நேரிடும். இயக்குணரின் சத்தத்திற்கு கீழ்படிந்தால், அவருடைய ஆதரவுக்கு உட்பட்டிருக்கலாம். அந்த ஆதரவினாலே பூவுலகின் மகிமை உண்டாகும். ஆனால், நித்திய ஜீவனை இழக்க நேரிடும். ஏனெனில், நித்திய ஜீவனைக் கொடுக்கின்ற வார்த்தையெல்லாம் ஆண்டவர் இயேசுவினிடத்திலேயே உண்டு. சற்று சிந்தித்துப் பாருங்கள். ஆண்டவராகிய இயேசு தாமே, தம்மை பின்பற்றுகின்றவர்களுக்கு, பிதாவினால் உண்டான மகிமையை கொடுத்தார். ஆண்டவர் இயேசு இந்த உலகத்திலே இருந்த நாட்களிலே, யூத அதிகாரிகளிலே அநேகர் அவரிடத்தில் விசுவாசம் வைத்தார்கள். அப்படியிருந்தும் ஜெபஆலயத்துக்குப் புறம்பாக்கப்படாதபடி, பரிசேயர் நிமித்தம் அதை அறிக்கைபண்ணாதிருந்தார்கள். ஏனெனில் அவர்கள் தேவனால் வருகிற மகிமையிலும் மனுஷரால் வருகிற மகிமையை அதிகமாய் விரும்பினார்கள். நம் மீட்பராகிய இயேசு தாமே கெத்சமனே பூங்காவிலே நமக்காய் வேண்டுதல் செய்யும் சத்தத்தை எண்ணிப் பாருங்கள். நாம் நித்திய மகிமையை அடையும்படி தம்மையே தாம் உயிர்த்தியாகம் செய்தார். எனவே மனிதர்களால் உண்டாகும் அழிந்து போகும் மகிமையை மேன்மைப்படுத்தாமலும், தேவனால் உண்டான மகிமையையே வாஞ்சித்து நாடுங்கள்.

**யோவான் 17:22**

**நீர் எனக்குத்தந்த மகிமையை நான் அவர்களுக்குக் கொடுத்தேன்.**

**ஜெபம்:** நித்திய ஜீவனைத் தருவேன் என்று சொன்ன தேவனே, இந்த உலகத்தினால் உண்டாகும் அற்பமான மேன்மைக்காக, பரலோக மேன்மையை நான் அற்பமாக்காதபடிக்கு பிரகாசமுள்ள மனக்கண்களை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# விலையேறப் பெற்ற இரத்தம்

> **யோவான் 12:47**
> நான் உலகத்தை நியாய ந்தீர்க்கவராமல், உலகத் தை இரட்சிக்கவந்தேன்.

பாவத்திலே கையும் களவுமாக பிடிப்பட்ட ஸ்திரியை கல்லெறிந்து கொல்லும்படிக்கு ஆண்டவராகிய இயேசுவினிடத்தில் கொண்டு வந் தார்கள். பரிசுத்தராகிய இயேசுவை சோதித்து அவரிடத்தில் குற்றம் கண்டுபிடிக்கும்படிக்கு அவரை நோக்கி: போதகரே, இந்த ஸ்திரீ விப ச்சாரத்தில் கையும் மெய்யுமாய்ப் பிடிக்கப்பட்டாள். இப்படிப்பட்ட வர்களைக் கல்லெறிந்து கொல்லவேண்டுமென்று மோசே நியாயப்பிர மாணத்தில் நமக்குக் கட்டளையிட்டிருக்கிறாரே, நீர் என்ன சொல்லுகிறீர் என்றார்கள். அவரோ அவர்களை நோக்கி: உங்களில் பாவமில்லாதவன் இவள்மேல் முதலாவது கல்லெறியக் கடவன் என்று சொன்னார். அவர்கள் அதைக் கேட்டு, தங்கள் மனச்சாட்சி யினால் கடிந்துகொள்ளப்பட்டு, பெரி யோர்முதல் சிறியோர்வரைக்கும் ஒவ் வொருவராய்ப் போய்விட்டார்கள். இயேசு தனித்திருந்தார், அந்த ஸ்திரீ நடுவே நின்றாள். இயேசு அவளை நோக்கி: ஸ்திரீயே, உன்மேல் குற்ற ஞ்சாட்டினவர்கள் எங்கே? ஒருவனாகிலும் உன்னை ஆக்கினைக்குள் ளாகத் தீர்க்கவில்லையா என்றார். அதற்கு அவள்: இல்லை, ஆண்ட வரே, என்றாள். இயேசு அவளை நோக்கி: நானும் உன்னை ஆக்கினை க்குள்ளாகத் தீர்க்கிறதில்லை நீ போ, இனிப் பாவஞ்செய்யாதே என் றார். ஆம் பிரியமான சகோதர சகோதரிகளே, பாவமில்லாத இயேசு ஏன் அப்படி சொன்னார்? *(யோவான் 8:46, லூக்கா 1:35, எபிரெயர் 4:15, 1 யோவான் 3:5).* தேவ மைந்தனாகிய இயேசு, இந்த உலகத்திலுள்ள வர்களின் பாவங்களின் நிமித்தம் அவர்களை நியாயந்தீர்க்கவராமல், அவர்களை பாவத்தினின்று இரட்சிக்கும்படிக்கே வந்தார். அந்த ஸ்திரியின் மரணத்திற்கேதுவான பாவத்தை தன்மேல் ஏற்றுக் கொண்டு, அவளை மன்னித்து அவளுக்கு மறுவாழ்வைக் கொடுத்தார். அவளுக்கு மாத்திரமல்ல, நம்முடைய மீறுதல்களையும் தம்மேல் சுமந்து கொண்டு, கோரமான சிலுவையிலே தம்மைப் பலியாக ஒப்புக் கொடுத்தார். நம க்கு மட்டுமல்ல, தம்மை விசுவாசிக்கின்ற யாவருக்கும் பாவ மன்னிப் பை கொடுக்க சித்தமுள்ளவராக இருக்கின்றார். நம்முடைய பாவங் களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார். இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவ ங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும். எனவே, விலையேறப் பெற்ற இரத்தினால் உண்டாகும் மீட்பை இன்றே பெற்றுக் கொள்ளுங்கள்.

**ஜெபம்:** அன்பின் பரலோக பிதாவே, நான் கெட்டுப்போகமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, உம்முடைய திருக்குமாரன் இயேசு கிறிஸ்து வின் வழியாக உண்டாகின இரட்சிப்புக்காக நன்றி. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

சனி | சித்திரை 8

மாலை வாசகம் – 2 கொரி 4:8–10

# கிறிஸ்துவின் நற்கந்தமாயிருக்கிறோம்

ஜனங்களெல்லாரும் பரபாசை விடுதலையாக்கும்! விடுதலையாக்கும்! என்று சத்தமிட்டுக் கேட்டார்கள். இயேசுவையோ சிலுவையில் அறையும்! சிலுவையில் அறையும் என்று கூக்குரலிட்டார்கள். பரபாசென்பவன் நகரத்தில் நடந்த ஒரு கலகத்தினிமித்தமும் கொலைபாதகத்தினிமித்தமும் காவலிலே வைக்கப்பட்டிருந்தான். ஆனால் தேவ மைந்தனாகிய இயேசுவோ நன்மை செய்கின்றவராக சுற்றித்திரிந்தார். இருளிலிருக்கும் ஜனங்கள்வெளிச்சத்தை காண வேண்டும் என்றும், மனதின் குருடாட்டத்திலே கட்டப்பட்டிருக்கின்றவர்கள் தங்கள் மனக் கடினத்தினால் அழிந்து போகாதபடிக்கு அவர்களின் பரிதாப நிலைமையை அவர்களுக்கு அறிவித்தார். ஆனாலும் அவர்களோ, பரிசுத்தமும் நீதியுமுள்ளவரை மறுதலித்து, கொலைபாதகனை தங்களுக்காக விடுதலைபண்ணவேண்டுமென்று கேட்டு, ஜீவாதிபதியைக் கொலை செய்தார்கள். அப்படியிருந்தும், அன்புள்ள மீட்பராகிய இயேசு அவர்களுடைய பாவங்களையும் தன்மேல் சுமந்து கொண்டு, அவர்களு க்காக பிதாவாகிய தேவனிடம் பரிந்து பேசினார். அன்று மட்டுமல்ல, இன்றும் கூட கிறிஸ்துவின் நற்செய்தியை அறிவித்து, மற்றவர்களுக்க நன்மை செய்ய விரும்புகின்றவர்களை மனிதர்கள் புறக்கணிக்கின் றார்கள். நண்பர்கள், உறவினர், சக வேலையாட்கள் முன்னிலையிலே ஆகாத வார்த்தைகளை பேசினாலும் அதை ஏற்றுக் கொள்ள தயாராக இருக்கின்றார்கள். ஆனால், ஆண்டவர் இயேசுவின் நாமத்தையும் இரட்சிப்பையும் பேசுவது தங்களுக்கு இடறல் என்று முறையீடு செய்கின்றார்கள். காரியம் அப்படியிருந்தாலும், நாம் நன்மை செய்வதிலிருந்து ஓய்ந்து விடுதல் சரியாகுமா? கிறிஸ்துவின் நற்செய்தியை அறிவிக்காமல் இருப்பது நியாயமாகுமா? இல்லை! நாம் அப்படியிருக்கலாகாது. கிறிஸ்துவுக்குள் எப்பொழுதும் எங்களை வெற்றிசிறக்கப்பண்ணி, எல்லா இடங்களிலேயும் எங்களைக்கொண்டு அவரை அறிகிற அறிவின் வாசனையை வெளிப்படுத்துகிற தேவனுக்கு ஸ்தோத்திரம். இரட்சிக்கப்படுகிறவர்களுக்குள்ளேயும், கெட்டுப்போகிறவர்களுக்குள்ளேயும், நாங்கள் தேவனுக்குக் கிறிஸ்துவின் நற்கந்தமாயிருக்கிறோம். பிரியமானவர்களே, உங்கள் நடுவில் பற்றியெரிகிற அக்கினியைக் குறித்து ஏதோ புதுமையென்று திகையாமல், கிறிஸ்துவின் மகிமை வெளிப்படும்போது நீங்கள் களிகூர்ந்து மகிழும்படியாக அவருடைய பாடுகளுக்கு நீங்கள் பங்காளிகளானதால் சந்தோஷப்படுங்கள். *(1பேதுரு 4:12-13)*

**2 கொரிந்தியர் 2:15**

**நாங்கள் தேவனுக்குக் கிறிஸ்துவின் நற்கந்தமாயிருக்கிறோம்.**

**ஜெபம்:** நித்திய ஜீவனுக்கென்று என்னை அழைத்த தேவனே, அதிசீக்கிரத்தில் நீங்கும் இலேசான நம்முடைய உபத்திரவங்களை கண்டு கலக்கமடையாமல், நித்திய கனமகிமையை நோக்கி முன்னேறிச் செல்ல கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

| ஞாயிறு \| சித்திரை 9 | 📖 மாலை வாசகம் – வெளி 1:6 – 8 |
|---|---|

# ஜீவனுள்ள புதிய மார்க்கம்

பிரதான ஆசாரியரும் வேதபாரகரும் மூப்பரும் அனுப்பின திரளான ஜனங்கள், பட்டயங்களையும், தடிகளையும் பிடித்துக்கொண்டு இயேசுவை பிடிக்க வந்தார்கள். அப்பொழுது அவருடை சீஷர்கள் எல்லாரும் அவரைவிட்டு ஓடிப்போனார்கள். சிலுவையில் மரித்த இயேசுவின் சரீரத்தை எடுத்து, கன்மலையில் வெட்டியிருந்த கல்லறையிலே அவரை வைத்து, கல்லறையின் வாசலில் ஒரு பெரிய கல்லைப் புரட்டிவைத்தான். யூதர்கள் கல்லுக்கு முத்திரை போட்டு, காவல் வைத்து, கல்லறையைப் பத்திரப்படுத்தினார்கள். இவைகள் சம்பவித்து இன்று மூன்று நாளாயிற்று. அவரே இஸ்ரவேலை மீட்டிரட்சிப்பவர் என்று நம்பியிருந்தார்கள். அவர்கள் வாழ்க்கையிலே நம்பிக்கையில்லாத சூழ்நிலை உண்டாயிற்று. பல அற்புதங்கள் அதிசயங்கள் செய்த சீஷர்கள், யூதர்களுக்குப் பயந்ததினால் கதவுகளை பூட்டி வீட்டிற்குள் இருந்தார்கள். அந்த வேளையிலே, அவர்களால் நம்ப முடியாத பெரிதான அதிசசெயல் உண்டாயிற்று. ஆண்டவர் இயேசு வந்து அவர்கள் நடுவே நின்று: உங்களுக்குச் சமாதானம் என்றார். வாழ்க்கையிலே பெரிதான பயம், துக்கம், மறுதலிப்பு, கண்ணீர் உண்டாயிருந்த வேளையிலே, ஒரு புதிய நம்பிக்கை, புதிய வாழ்வு உண்டாயிற்று. மரணத்தை வென்று உயிர்தெழுந்து தேவகுமாரனாகிய இயேசு தம்முடைய சீஷர்களின் பெலவீனத்தை பாராமல், அவர்களை தேடி வந்து அவர்களை தேற்றி, உறுதிப்படுத்தினார். ஆவர்களுக்கு மட்டுமல்ல, தம்மை விசுவசிக்கின்றவர்கள் யாவரும், புதிய வாழ்வை கண்டடையும்படி ஜீவனுள்ள பதிய மார்க்கத்தை மகா பிராதான ஆசாரியராகிய இயேசு உண்டாக்கினார். அவர் நம்முடைய பலவீனங்களைக கண்டு நம்மை தண்டிக்கின்றவர் அல்ல. அவர். எல்லாவிதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டார். அதனால் நம்முடைய நிலைமைய அவர் அறிந்திருக்கின்றார். நம்முடைய வாழ்க்கையிலே, மனித அதிகாரங்களினால் நெருக்கங்கள் உண்டாகும் போது, பயம் மனதை ஆட்கொண்டு விடுகின்றது. அந்த நம்முடைய அறிவுக்கெட்டியபடி நாம் பாதுகாப்பை தேடி ஒளிந்து கொண்டாலம், எம்மீது அன்புகூர்ந்து எமக்காக பலியான இயேசு நம் நடுவே இருக்கின்றார். அவர் நமக்கு சமாதானத்தை தருக்கின்றார். தேவன் நம்முடைய பட்சத்திலிருந்தால் நமக்கு விரோதமாயிருப்பவன் யார்? இந்த உலகத்திலிருப்பவனைப் பார்க்கிலும் நம்மோடு இருப்பவர் பெரியவராயிருக்கின்றார். ஜெயங் கொண்டவர் நம் பக்கதிலிப்பதினால் நாமும் ஜெயங்கொள்கின்றவர்களாக வாழ்வோமாக.

**யோவான் 20:21**

**உங்களுக்குச் சமாதானமுண்டாவதாக**

**ஜெபம்**: ஜெயம் கொடுக்கும் தேவனே, இந்த உலகத்தினால் உண்டாகும் உபத்திரவங்களை கண்டு சோர்ந்து போகாமல், உறுதியோடு உம்மில் நிலைத்திருந்து, உம் சித்தத்தை நிறைவேற்று எனக்கு பெலன் தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# கர்த்தருடைய வேளைக்காக காத்திருங்கள்

நீண்ட நாட்களுக்குப் பின்னர் குறிப்பிட்ட ஒரு பட்டணத்திற்கு செல்லும்படிக்கு, ஒரு குடும்பத்தினர், காலையிலே நேரத்தோடு இரயில் நிலையத்திற்கு சென்றிருந்தார்கள். அவர்கள் வசித்து வந்த கிராமத்திலிருந்து, பட்டணம் மிகவும் தொலைவிலுள்ளதால், அங்கிருந்து இரயிலானது கிழமைக்கு ஒரு முறையே சென்று வந்தது. பயணிகள் பயணச்சீட்டைப் பெற்றுக் கொள்வதற்காக நீண்ட வரிசையில் அதிக நேரமாகக் காத்திருந்தார்கள். குறிப்பிட்ட குடும்பத்தினரோ அதிகாலையில் வேளையோடு அங்கே சென்றிருந்ததால், பயணச் சீட்டைப் பெற்றுக் கொண்டு இரயிலிலே ஏறிக் கொண்டேயிருந்தார்கள். பிள்ளைகளின் உள்ளத்திலோவென்றால் மிகவும் பரவசம். இரயில் எப்போது கிளம்பும் என்றும், ஏன் பயணிகள் தாமதமாகின்றார்கள் என்றும், பொறுமையிழந்தவர்களாக அடிக்கடி பெற்றோரை கேட்டுக் கொண்டார்கள். மற்ற ஜனங்களும் இரயிலில் பயணம் செல்ல வேண்டும் எனவே பொறுமையாக இருங்கள் என்று பெற்றோர் பிள்ளைகளை அமைதிப்படுத்தினார்கள். ஆம் பிரியமானவர்களே, நாம் கர்த்தரை அறிந்து, இரட்சிக்கப்பட்டு அநேக காலங்கள் கடந்திருக்கலாம். ஆனாலும் நாமும் அந்தச் சிறு பிள்ளைகளைப் போல, கர்த்தர் எப்போது வருவார்? ஏன் தாமதிக்கின்றார் என்று பல கேளவிகளை மனிதர்கள் கேட்பதுண்டு. மேலும், நாம் நற்செய்தியை கேட்டும் உணர்வற்றிருக்கின்றவர்களை குறித்து மனதில் எரிச்சல் அடைவதால், சிலவேளைகளிலே விசுவாசிகளாகிய நாம் மற்றவர்களை நியாயந்தீர்க்கின்றவர்களாக மாறிவிடுகின்றோம். தாமதிக்கிறார் என்று சிலர் எண்ணுகிறபடி, கர்த்தர் தமது வாக்குத்தத்தத்தைக் குறித்துத் தாமதமாயிராமல் ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்பவேண்டுமென்று விரும்பி, நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார். நாமும் ஆண்டவர் இயேசுவை அறிய வேண்டிய பிரகாரம் அறியாமல் அலைந்த நாட்கள் உண்டு. அறியாமையின் நாட்களிலும், மனக்கடினத்தில் வாழ்ந்த நாட்களிலும் கர்த்தர் தம்முடைய கிருபையை நம்மேல் பொழிந்தாரே. நாம் நிர்மூலமாகாதபடிக்கு நம்மை அவர் காத்துக் கொண்டார். இப்பொழுது நாங்கள் கூறுவதை மற்றவர்கள் உடடினடியாக செவி கொடுக்க வேண்டும் என்ற மனநிலைமையை களைந்து விட்டு, நீடிய பொறுமையுள்ளவர்களாக, மற்றவர்களுடைய இரட்சிப்புக்காக விசுவாசத்தோடு கூடி ஜெபத்தோடு காத்திருப்போம்.

**2 பேதுரு 3:9**

**ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்பவேண்டுமென்று விரும்பி, நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார்.**

**ஜெபம்:** இரட்சிப்பின் தேவனே, என்மேல் நீர் நீடியபொறுமையுள்ளவராக இருந்தீர். அதுபோலவே, உம்மை அறியாத மற்றவர்களை நான் நியாயந்தீர்க்காமல் அவர்களின் இரட்சிப்புக்காக காத்திருக்க கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# என்னுடைய ரூபம்

ஒரு ஊரிலே நடைபெற்ற சிரமதான சமூகப் பணிக்காக சில நண்பர்கள் கூடி உதவும்படியாக சென்றிருந்தார்கள். மாலையிலே வேலைகள் யாவும் பூர்த்தியாகின்ற வேளையிலே, அந்த நண்பர்களில் ஒருவன், மற் றய நண்பர்கள் மிகவும் களைப்புற்று, அவர்கள் கைகளும், கால்களும், முக ங்களும், அணிந்திருந்த உடைகள் யாவும் அழுக்காவும் இருப்பதை கண்டு அவர்களை பார்த்து சிரித்தான். பின்னர் தன் வீட்டிற்கு சென்று, தன்னை கண்ணாடியிலே பார்த்த போதுதான் அவன் தன் அழுக்கான கோலத்தை கண்டு வெட்கமடைந்தான். இப்படியாகவே, மனிதர்கள் மற்றவர்களின் விவகாரங்களில் அதிக கவனத்தை செலுத்தும் போது, அவர்களுடைய குறைவு களை கண்டு கொள்கின்றார்கள்.ஆனால், அவர்களோ தங்களைத் தாங்கள் ஆராய்ந்து பார்க்கத் தவறிவிடுகின்றார்கள். எங்கள் சரீரத்தின் கோலத்தை நாம் கண்ணாடியிலே பார்ப்பது போல, எங்கள் உள்ளான மனிதனுடைய நிலைமையை நமக்கு உணர்த்தி காண்பிக்கும் கண்ணாடியாக தேவனுடைய வார்த்தையானது இருக்கின்றது. அந்த வார்த்தையின் வெளிச்சத்திலே நாம் நம்மை நாள்தோறும் ஆராய்ந்து பார்த்து, வேதனையுண்டாக்கும் வழிகளை விட்டு விலக வேண்டும். அப்படி தன்னைத் தான் ஆராய்ந்து பார்க்காமல், மற்றவர்களுடைய நிலைமையை பார்க்கின்றவர்களின் நிலைமை எப்படியாக இருக்கின்றது? நீ உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தை உணராமல், உன் சகோதரன் கண்ணிலிருக்கிற துரும்பைப் பார்க்கிறதென்ன? இதோ, உன் கண்ணில் உத்திரம் இருக்கையில் உன் சகோதரனை நோக்கி: நான் உன் கண்ணிலிருக்கும் துரும்பை எடுத்துப்போடட்டும் என்று நீ சொல்வதெப்படி? (மத்தேயு 7:2-4). வீட்டிலே மற்றய குடும்ப அங்கத்தினரின் குறைகள், வேலைத் தளத்திலே மற்ற ஊழியர்களின் குறைகள், சபையிலே மற்றய விசுவாசிகளின் குறைகள், நாட்டின் அதிகாரிகளின் குறைகள் போன்றவைகளே இன்று மனிதர்களுடைய பொதுவான சம்பாஷனைகளாக இருக்கின்றது. ஒருவேளை அவைகளில் உண்மை இருக்கலாம். ஆனால், அவைகளையே பேசிக் கொண்டிருப்பதால், மனிதர்கள் தங்கள் நிலைமையை அறியாதபடிக்கு வஞ்சிக்கப்பட்டு போய்விடுகின்றார்கள். எனவே எங்கள் ஆவிக்குரிய ரூபத்தை தேவ வார்த்தையின் வெளிச்சத்தில் அனுதினமும் ஆராய்ந்து பார்த்து, தேவ சாயலிலே வளர்ந்து பெருகுவோமாக.

**கலாத்தியர் 6:4**

**அவனவன் தன்தன் சுயகிரியையைச் சோதித்துப்பார்க்கக்கடவன்;**

**ஜெபம்:** என் யோசனைகளை அறிந்த தேவனே, உம்முடைய வார்த்தையின் வெளிச்சத்திலே என்னையே நான் ஆராய்ந்து பார்க்கின்றவனாக இருக்கும்படிக்கு உணர்வுள்ள இருதயத்தைத் தந்து வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# யார் தகுதியுள்ளவன்?

மேற்கத்தைய நாடொன்றின் அதிகாரிகள், உலகத்திலுள்ள ஏனைய நாடு களிலிருந்து மக்கள் தங்கள் நாட்டிற்குள் குடியேறுவதற்கான வழிமுறை களை ஒழுங்குபடுத்தினார்கள். அதன்படிக்கு, 1. தங்கள் நாட்டில் முன் கூட்டியே குடியேறியிருக்கும் தங்கள் சொந்த குடும்ப அங்கத்தவர்களை ஆதரிக்கவும், 2. அவரவர் தங்கள் சொந்த திறமை அடிப்படையிலே குடி யேறுவதற்கு தகுதியடைதல், 3. குலு க்கள்முறையிலே அதிஷ்ட இலாப சீட்டின் முறைப்படி தெரி ந்து கொள்ளப்படுவதற்கும், 4. தங்கள் சொந்த தேசத்திலே வாழ் வாதாரத்தை இழந்து, அநாதர வாக விடப்பட்டிருப்பவர்கள் அகதிகளாக குடியேறுவதற்கும் அனு மதித்தார்கள். இவை யாவும் அநேகருடைய வாழ்விலே நன்மையையு ண்டாக்கியது. இப்படிப்பட்ட வழிமுறைகளை நாம் அழிந்து போகின்ற இந்த உலகத்தின் ராஜ்யங்களிலே காண்கின்றோம். ஆனால் தேவனு டைய ராஜ்யத்தை சுதந்தரித்துக் கொள்ள முடியும்? நான் இரட்சி ப்படைந்திருக்கின்றேன் ஆதலால் என்னுடைய பிள்ளைகளை நான் என்னோடு பரலோகத்திற்கு கொண்டு போக முடியுமோ? நான் ஒரு சன்மார்க்கன் என்னிடத்தில் எத்தனையோ நீதியின் கிரியைகள் உண்டு அதன் அடிப்படையில் நான் தேவனுடைய இரட்சிப்பை பெற்றுக் கொள்ளக் கூடுமோ? நான் எப்படியோ வாழ்ந்து வாழ்கின்றேன் அதிஷ்ட இலாபச் சீட்டின் குலுக்கள் முறையில் பரலோகத்திற்கு செல்ல முடி யுமோ? இந்த உலகிலே நான் தகுதியற்றவனாக, பாவியாக இருக் கின்றேன், அதனால் நான் தகுதியடைய முடியுமோ? நம்முடைய உற வுகளின் படியுமல்ல, நம்முடைய நீதியின் கிரியைகளின் நிமித்தமுமல்ல, அதிஷ்ட இலாப குழுக்கள் முறையுமல்ல, ஆதரவற்ற நிலைமையுமல்ல. ஒருவனும் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடைய வேண்டும் என்று பிதாவாகிய தேவன்தாமே தம்முடைய ஏகசுதனாகிய இயேசுவை இந்த உலகத்திற்கு தந்தருளினார். எந்த ஒரு மனிதனும், அவன் எப்ப டிப்பட்டவனாக இருந்தாலும், மீட்பர் இயேசுவை தன் சொந்த இரட் சகராக ஏற்றுக் கொண்டு, பிதாவாகிய தேவனுடைய சித்தத்தை தன் வாழ்வில் நிறைவேற்றுபவனாக இருந்தால், அவன் பரலோக ராஜ் யத்தை சுதந்தரித்துக் கொள்கின்றான். எனவே, எந்த நிலைமையிலே நீங்கள் இருந்தாலும் பரலோகத்தின் வாசலாகிய இயேசுவை விசுவாசி யுங்கள். அவர் தரும் இரட்சிப்பை பெற்றுக் கொள்ளுங்கள். பரலோக ராஜ்யத்தை சுதந்தரித்துக் கொள்ளுங்கள்.

**யோவான் 10:9**

நானே வாசல், என் வழியாய் ஒருவன் உட்பிரவேசித்தால், அவன் இரட்சிக்கப்படுவான்

**ஜெபம்:** இரகத்தில் ஐசுவரியமுள்ள பரலோக தந்தையே, தகுதியற்ற என்னை, உம்முடைய திருக்குமாரனாகிய இயேசு வழியாக உம்முடைய ராஜ்யத்திற்கு பங்காளியாக மாற்றியதற்காக உமக்கு நன்றி செலுத்துகின் றேன். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்

# செய்கையும் விருப்பமும்

நண்பனே, உன்னுடைய சிறு வயதிலிருந்து உன்னையும் உன் குடுத்பத்தினரையும் நான் அறிந்திருக்கின்றேன். நீ செய்து வரும் நன்மைகள் ஏராளம். துன்பத்தின் நாட்களிலும் ஆலயத்திற்கு தவறாமல் செல்வதையும், தேவ காரியங்களிலே ஊக்கமாக ஈடுபடுபவதற்கும் நான் சாட்சியாக இருக்கின்றேன். நிச்சயமாக தேவன் உன் ஜெபத்தை கேட்பார் என்றான். அதற்கு அந்த விசுவாசியானவன் மறுமொழியாக: அப்படியல்ல நண்பா, இவையெல்லாவற்றையும், நான் செய்வதற்கு தேவனே தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும் செய்கையையும் என்னில் உண்டாக்குகிறவராயிருக்கிறார். நான் தேவனுடைய சமுகத்திற்கு விண்ணப்பத்தோடும் வேண்டுதலோடும் செல்லும் போது, என்னுடைய கிரியைகளை முன்னிட்டல்ல, அவருடைய கிருபையின்படி எனக்கு மனதிரங்கும்படியே வேண்டிக் கொள்வேன் என்று பதில் கூறினான். ஆம் பிரியமான சகோதர சகோதரிகளே, இருளிலிருக்கும் உலகத்திற்கு வெளிச்சமாக இருக்கும்படி தேவனானவர் நம் ஒவ்வொருவரையும் ஏற்படுத்தியிருக்கின்றார். நம் அந்தரங்கமான ஜெபங்களை கேட்டு, பிறருடைய வாழ்விலே விடுதலையை உண்டு பண்ணுகின்றார். அதே வேளையிலே வெளியரங்கமான நற்செயல்களையும் தான தர்மங்களையும் தேவன் நம் வழியாக நடத்தி வருகின்றார். அந்த வேளையிலே, நாம் இந்த உலகத்திலுள்ள மனிதர்களின் புகழ்ச்சிக்கு காரணராக மாறிவிடுகின்றோம். சில சமயங்களிலே அந்த புகழ்ச்சிகள் நமக்கு மனத்திருப்தியை உண்டாக்கிவிடுகின்றது. நாம் மற்றவர்களுடைய பார்வையிலே மேதாவிகளைப் போல எண்ணப்படாலாம். இவையொன்றையும் நாம் நம்முடைய இருதயங்களிலே தங்குவதற்கு இடங்கொடுக்காமல், “நாங்கள் அப்பிரயோஜனமான ஊழியக்காரர், செய்ய வேண்டிய கடமை யைமாத்திரம் செய்தோம் என்று சொல்லுங்கள் என்று ஆண்டவராகிய இயேசு நமக்கு கூறியிருக்கின்றார். தேவ சமுகத்திற்கு செல்லும் போது, தேவ கிருபையையே நாம் மேன்மைப் படுத்த வேண்டும். நாம் தேவனுடைய திருக்கரத்தின் கருவிகளாக இருப்பது நமக்கு உண்டான பெரிதான சிலாக்கியமாக இருக்கின்றது. நம்முடைய கிரியைகள் வழியாக பிதாவாகிய தேவனுடைய நாமமே மேன்மைபட வேண்டும். முதலாவதாக, அந்த மேன்மைப்படுத்துதலானது நம்முடைய இருதயத் திலிருந்து தாழ்மையோடு எழுந்து செல்ல வேண்டும்.

**பிலிப்பியர் 2:13**

**ஏனெனில் தேவனே தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும் செய்கையையும் உங்களில் உண்டாக்குகிறவராயிருக்கிறார்.**

**ஜெபம்:** என்னை உம் பிள்ளையாக தெரிந்து கொண்ட தேவனே, அற்பமான என்னையும் நீர் உம்முடைய திருகரத்தின் கருவியாக பயன்படுத்தி வருவதற்காக நன்றி. தொடர்ந்தும் நான் உம்மிலே நிலைத்திருக்க கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# உறுதியாய் நிலைத்திருங்கள்

ஒரு குறிப்பிட்ட தேசத்தின் போர்ச்சேவகர்கள், தங்கள் ராஜாவோடு ஒன்றுபட்டவர்களாய், தங்கள் தேசத்தை முற்றுகையிட வந்த எதிரிக ளோடு தங்களுக்கிருந்த முழு பெலத்தோடும் நிலைத்திருந்து போராடி னார்கள். எதிரிகளின் வஞ்சகமான சூழ்ச்சிகளினால், பின்னிட்டு போகா மல், தாங் கள் ஆரம்பத்திலே கொண்ட வைராக்கியத்தைவிட்டு சற்றும் விலகிப் போகாதிருந்தார்கள். கிறிஸ்தவ வாழ்க்கையிலே நமக்கு போர ாட்டங்கள் உண்டு என்பதை நாம் யாவரும் கற்றிருக்கின்றோம். மாம்ச த்தோடும்இரத்தத்தோடுமல்ல, துரை த்தனங்களோடும், அதிகாரங்களோ டும், இப்பிரப ஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வானமண் டலங்களிலு ள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு. ஆதியிலே இருந்தது போலவே எதிரியாகிய பிசா சானவன் தன்னுடைய வஞ்சகமான தந்திரங்களினால் தேவ பிள்ளை களோடு போராட்டம் செய்கின்றான். இவையாவற்றையும் தேவ பிள்ளை கள் நன்கு அறிந்திருக்கின்ற போதிலும், உபத்திரவங்கள் சூழ்ந்து கொள்ளும் போது, தங்களுக்கு போராட்டங்கள் உண்டு என்ப தையும், தங்களுடைய எதிரி யார் என்பதையும் சிலர் மறந்து போய்விடு கின்றா ர்கள். தேவ ஊழியராகிய பவுல், “சோதனைக்காரன் உங்களைச் சோத னைக்குட்படுத்தினதுண்டோவென்று, உங்கள் விசுவாசத்தை அறியும்ப டிக்கு, தீமோத்தேயுவை உங்களிடத்தில் அனுப்பினேன்” என்று தெச லோனிக்கேயாவிலுள்ள சபையோருக்கு கூறினார். பிசாசானவனிற்கு நம்மை ஜெயம் கொள்ள முடியாது அதனால், அவன் நாம் இருக்கும் இடத்திலேயே வஞ்சிக்கப்பட்டு போய்விடும்படிக்கு காதுகளுக்கு இனி மையான ஆலோசனைகளோடு நம்மிடத்தில் வருவான். பார்வைக்கு இச்சிக்கக்கூடிய காரியங்களுக்கு நம் கண்களை திருப்பும்படி எத்தனம் செய் வான். அவனுடைய வார்த்தைகள் நம் புத்தியை தெளிவிக்கின்றது போல இருக்கும். பிரியமானவர்களே, ஆதியிலே கொண்ட விசுவாச த்தை விட்டு வழுவிப்போகாமல், நல்ல போர்சேவகர்களைப் போல, உங்கள் நிலைப்பாட்டில், உறுதியாய் தரித்திருங்கள். எதிரியினால் உண் டாகும் உபத்திவரங்களை கண்டு கலங்காமல், எதிரியை ஜெயங் கொண்டு ஆண்டவர் இயேசுவை நோக்கிப் பாருங்கள். உபத்திரவங்க ளினாலே நீங்கள் அசைக்கப்படாதபடிக்குத் திடமனததுள்ளவர்களா யிருந்து, பெலவீனப்பட்டிருக்கும் மற்றய சகோதர சகோதரிக்கு மாதிரி யாய் வாழ்ந்து, விசுவாசத்தைப்பற்றி வாழும்படிக்கு அவர்களுக்கு புத்திசொல்லுங்கள்.

**1 தெச 3:5**

**உங்கள் விசுவாசத்தை அறியும்படிக்கு, அவனை (தீமோத்தேயுவை) அனுப்பினேன்.**

**ஜெபம்:** சர்வ வல்லமையுள்ள தேவனே, உபத்திரவங்களினாலே நான் அசைக்கப்படாமல், விசுவாசத்திலே நிலைத்திருந்து, எதிரியின் சூழ்ச்சி களை இணங்கண்டு ஜெயங் கொள்ள பெலன் தந்து நடத்துவீராக.. இரட் சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# காணும் உலகமா? காணாத பரலோகமா?

இன்றைய உலகமானது, முன்னர் இருந்த உலகங்களைவிட அறிவு பெருத்த யுகம் என தற்போதிருக்கும் இந்த உலகத்தின் ஞானவான்கள் கருதுகின்றார்கள். இந்த உலகத்திலே கொஞ்சக் காலம் வாழும் நாம், வாழ்வாதாரத்திற்காக பல காரியங்களை செய்கின்றோம். கல்வி கற்கின்றோம், உழைக்கின்றோம், வீடுகளை கட்டுகின்றோம், உடுத்துவதற்கு உடைகளை உண்டு பண்ணுகின்றோம், இன்னும்சிலபொழுது போக்கான காரியங்களை செய்து வருகின்றோம். எனவே அதிலே நன்மைகள் இல்லை என்று முற்றிலும் புறக்கணித்துவிட முடியாது. ஆனால் பெரும்பாலான மனிதர்களோ, இந்த உலகமும் அதிலுள்ளவைகளும் அநித்தியமானவைகள் என்பதை அறிந்தும் கூட அதை நேசிக்க ஆரம்பிப்பதால், அவை அவர்கள் இருதயத்தை ஆட்கொண்டு விடுகின்து. இதனால் அவர்கள் இருதயம் உணர்வற்ற இருதயமாகவும் முள்ளுள்ள நிலத்தைப் போலவும் மாறிவிடுகின்றது. அந்த முள்ளுள்ள நிலத்திலே தேவனுடைய வார்த்தையானது விழுந்து முளைக்கின்றது, அதே வேளையிலே இந்த உலகத்தின் சிநேகமான முற்புதர்களும் முளைத்துக் கொண்டே இருக்கின்றது. அந்த முற்புதர்களை அவர்கள் மேன்மைப்படுத்துவதால், அவை சீக்கிரமாய் வளர்ந்து தேவ வார்த் தையை அகற்றி விடுகின்றது. இது தேவனுடைய சித்தமல்ல, அவரவர்களுடைய சொந்த தீர்மானத்தினால், உலக பொருட்களின் மேலுள்ள ஆசையினால் அவர்கள் தங்களை தாங்களே மயக்கிக் கொள்கின்றார்கள். பிரியமானவர்களே, உங்கள் இருதயத்தில் எதற்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டிருக்கின்றது? உங்கள் கல்வி, வேலை, வீடுவாசல்கள், உடை ஆபரணங்கள், உல்லாசப் பயணங்கள் போன்றவைகள் தேவனுடைய ஆலோசனைகளை இரண்டாவது இடத்திற்கு தள்ளிவிடுகின்றதா? அல்லது தேவ ஆலோசனையின் வழியிலே, இந்த உலகத்திலே நமக்கு தேவையானவைகளை எடுத்துக் கொண்டு, தேவ வார்த்தையை மேன்மைப் படுத்துவதா? ஒருவன் இரண்டு எஜமானனுக்கு ஒருபோதும் வேலை செய்ய முடியாது. அதாவது, ஒன்றில் உலகம் நம்முடைய எஜமானனாக இருக்கலாம் அல்லது தேவன் நம்முடைய எஜமானனாக இருக்கலாம். எனவே இந்த உலகத்தில் நன்மையாக தோன்றுபவைகளில் நாம் அன்பு கூராமால், நம்மை பரலோகம் சேர்க்கும்படி நம்மைதெரிந்துகொண்ட நம்தேவனாகிய கர்த்தரையே அன்பு செய்வோமாக. தேவ வார்த்தைகளின்படி, இந்த உலகத்தை நாம் ஜெயங்கொண்டு, வாழ்வோமாக.

**1 யோவான் 2:15**

**உலகத்திலும் உலகத்திலுள்ளவைகளிலும் அன்பு கூராதிருங்கள்**

**ஜெபம்:** அன்பின் தேவனே, இந்த உலகத்தினால் உண்டாகும் நன்மைகளை மேன்மைப் படுத்தி, அவைகளை பற்றிக் கொள்ளாமல், உம்மை பற்றிக் கொண்டு, மேலானவைகளை தேடும்படிக்கு எனக்கு கிருபை செய்வீராக. இரட் சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# கர்த்தர் குறித்த நேரம்

> **சங்கீதம் 37:5**
>
> உன் வழியைக் கர்த்தருக்கு ஒப்புவித்து, அவர்மேல் நம்பிக்கையாயிரு; அவரே காரியத்தை வாய்க்கப்பண்ணுவார்.

நம்முடைய ஜீவ யாத்திரையின் நாட்களிலே பல பிரசங்கங்களையும் வேதப்படிப்புக்களையும் கேட்டிருக்கின்றோம். நாம் கற்று அறிந்தவைகளிலே, மிகவும் முக்கியமான அம்சமாக உங்கள் மன திலே தோன்றும் காரியம் என்ன? கற்றவைகளை வாழ்க்கையின் அனு பமாக மாற்றிக் கொள்ளும்வழியிலேவிசுவாசிகளா கிய நாம் தவறக்கூடாததும், பலமுறை தவறிப்போகும் காரியமொன்றை கூறுங்கள் என்றால், அவற்றில் எது உங்கள் கண்களுக்கு முன்பாக தெரிகின்றது. சற்று சிந்தித்துப் பாருங்கள்! கடந்து வந்த பாதையை திரும்பிப் பார்பீர்களானால், நம்முடைய கிறிஸ்த வாழ்க்கையிலே ஒரு சில முக்கியமான காரியங்களானது நம் மனதிலே தோன்றலாம், அவைகளில் "தேவனுடைய வேளைக்காக காத்திருத்தல்" நாம் தவறக்கூடாத மிக முக்கியமான காரியமாகும். ஆனால் நாம் அதிலேயே அதிகமாக தவறி ப்போய்விடுகின்றோம். நாம் மட்டுமல்ல, வேதத்தில் காணும் தேவனுக்கு பிரியமான பாத்திரங்களும் கூட, தேவனுடைய வாக்குத்தத்தத்தை குறித்து பொறுமையை இழந்து, தேவனுடைய வேளைக்கு காத்திருக்க தவறி யதால் அவர்கள் வாழ்க்கையிலே பின்னடைவுகளை கண்டார்கள். தேவன் சுமத்தாத பாரங்களை தங்கள்மேல் தாங்களே சுமத்திக் கொண்டார்கள். வாக்குரைத்த தேவன் உண்மையுள்ளவர் என்றும் அவர் வாக்கு மாறாதவர் என்றும், அவர் செய்ய நினைத்ததை யாரும் தடுக்க முடியாது என்றும் நாம் நன்கு அறிந்திருந்தாலும், சில வேளைகளிலே, அவர் குறித்த வேளை வருமுன், காரியங்களை நம்முடைய கரத்திலே நாம் எடுத்துக் கொண்டு, தேவ ஆலோசனைகளை தள்ளிவிட்டு, நம்முடைய பார் வைக்கு செம்மையாக தோன்றும் வழியிலே காரியங்களை தீவிரமாக செய்து முடித்து விடுகின்றோம். ஆனால், ஆண்டுகள் கடந்து சென்று மறுபடியும் புத்தி தெளியும் போது, நாம் செய்தவைகளைக் குறித்து மனம்வருந்துகின்றோம். கர்த்தர் அவசரப்படுவதுமில்லை, அவர் பிந்தி நடப்பிப்பவருமில்லை. அவர் மறந்து போகின்றவருமில்லை. அவர் முன் குறித்த நேரத்திலே, முன்குறித்தவைகளை நடத்தி முடிக்கின்றார். எனவே, பொறுமை இழந்து போகும்படி காரியங்கள் தாமதிப்பதுபோல தோன்றலாம், அந்த வேளைகளிலும், உங்கள் வழிகளை கர்த்தருக்கு ஒப்புவித்து காத்திருங்கள். தேவ ஆலோசனைகளை அற்பமாக எண்ணாமல், அவற்றை கேட்டு கீழ்படிவுள்ளவர்களாய், ஜெபத்திலே தரித்திருங்கள். கர்த்தர் யாவையும் செய்து முடிப்பார்.

**ஜெபம்**: சோர்ந்துபோகிறவனுக்கு பெலன் கொடுத்து, சத்துவமில்லாதவனுக்குச் சத்துவத்தைப் பெருகப்பண்ணுகிற தேவனே, நான் உம்முடைய வேளைக்கு காத்திருக்க எனக்கு பொறுமையை கற்றுத் தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# கர்த்தரையே நம்பியிருங்கள்

மனிதர்கள் எவரை அல்லது எதை முதன்மையாக நம்பி வாழ்கின் றார்களோ, அந்த நபரை அல்லது முதன்மைப்படுத்தும் காரியத்தை தங் களுக்கு தேவனாகிக் கொள்கின்றார்கள். நீங்கள் உங்களைக் கெடுத்துக் கொண்டு, ஆண் உருவும், பெண் உருவம், பூமியிலிருக்கிற யாதொரு மிருகத்தின் உருவம், ஆகாயத்தில் பறக்கிற செட்டையுள்ள யாதொரு பட்சியின் உருவம், பூமியிலுள்ள யாதொரு ஊரும் பிராணியின் உரு வம், பூமியின்கீழ்த் தண்ணீரி லுள்ள யாதொரு மச்சத்தின் உருவமாயிரு க்கிற இவைகளில் யாதொரு உரு வத்திற்கு ஒப்பான விக்கிரகத்தை உங்களுக்கு உண்டாக்காதபடிக்கும், உங்கள் கண்களை வானத்திற்கு ஏறெடுத்து, உங்கள் தேவனாகிய கர்த் தர் வானத்தின் கீழெங்கும் இருக்கிற எல்லா ஜனங்களுக்கும் ஏற் படுத் தின வானத்தின் சர்வசேனைகளாகிய சந்திர சூரிய நட்சத்தி ரங்களை நோக்கி, அவைகளைத் தொழுது சேவிக்க இணங்காதப டிக்கும், உங்கள் ஆத்துமாக்களைக்குறித்து மிகவும் எச்சரிக்கையாயி ருங்கள் இருங்கள் என்று தேவனாகிய கர்த்தர் கூறியிருக்கின்றார். தேவ தாச னாகிய மோசே, நியாயப்பிரமாணத்தையும் கற்பனைகளையும் தேவனு டைய வழிநடத்துதலின்படி பெற்றுக்கொள்ளும்படி, மலையில் ஏறி தேவ சமுகத்திற்கு சென்றான். மோசே தேவ பர்வதத்தில் ஏறிப்போகையில், அவன் மூப்பரை நோக்கி: நாங்கள் உங்களிடத்தில் திரும்பிவருமட்டும், நீங்கள் இங்கே எங்களுக்காகக் காத்திருங்கள் என்றான். ஜனங்களோ, அவன் வர தாமதமாகிவிட்டது என்று, தங்களை அழைத்துக் கொண்டு வந்த கர்த்தரின் கட்டளைகளுக்காக காத்திருக்கக்கூடாமல், கன்றுக்குட்டி களை வார்த்து, அவைகளை தங்கள் தெய்வம் என்று கூறி, அவைகளு க்கு ஆராதனை செய்தார்கள். இன்றைய நாட்களிலே மனிதர்கள் கர்த்த ரால் வரும் ஆசீர்வாதத்திற்கு பொறுத்திருக்கக்கூடாமல், தேவ ஆலோ சனைகளை அசட்டைபண்ணி, தேவ ஆலோசனைகளை கூறுபவர்களை அற்பமான எண்ணி, உலக போக்கிற்கு உட்பட்ட ஆலோசனைகளின் படி பொன்னையும் பொருளையும் அவைகளை உண்டுபண்ணக் கூடிய கல்வியையும், தொழிலையும் தங்கள் தெய்வமாக்கி, அவை களை அவர்களின் பிரதானமாக திட நம்பிக்கையாக மாற்றி விடுகின்றார்கள். உலகத்தினால் உண்டாகும் செழிப்பை தேவனுடைய ஆசீர்வாதம் என்று கூறிக் கொள்கின்றார்கள். நீங்களோ பொருளாசையை குறித்து எச்சரி க்கையாயிருங்கள். அதனால் உண்டாகும் வசதிகள் உங்கள் விசுவாச த்தை சேதப்படுத்தி, எல்லா கண்ணிகளையும் உண்டு பண்ணிவிடும்.

**கொலோசெயர் 3:5**

**விக்கிரகாராதனையான பொருளாசை**

**ஜெபம்:** பரலோகத்திலே உங்களுக்கு பொக்கிஷங்களைச் சேர்த்து வையுங்கள் என்று சொன்ன தேவனே, நான் பூமியின் பொருளாசையை சாராமல், உம்முடைய வார்த்தையின் வழியிலே நான் வாழும்படிக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

| செவ்வாய் \| சித்திரை 18 | 📖 மாலை வாசகம் – மத்தேயு 6:34 |
|---|---|

# நாளையைக் குறித்த கவலை

பிள்ளைகளுடைய எதிர்காலம் எப்படியாக இருக்கும்? அவர்களுடைய வாழ்க்கைக்கு ஏற்ற துணையை எப்படி கண்டு கொள்வது? தற் போதைய சூழ்நிலைகளில் அது சாத்தியமாகுமா? என்று பல சந்தே கங்கள் பெற்றோரின் வாழ்விலே எழுவதுண்டு. வாழ்விலே கஷ்டங் களும் துன்பங்களும் சூழ்ந்திருக்கும்போது விசுவாசிகள் கர்த்தரை விட்டால் தங்களுக்கு வழியேதும் இல்லை என்று வாழ்க்கின்றார்கள். அது உண்மையான நிலைமை. ஏனெனில், அவர்கள் நினைத்த பிரகாரம் வாழ்வதற்கு அவர்களிடம் போதுமான பணமோ பொருளோ வசதியோ இல்லை. எனவே, தங்கள் இயலாத நிலையையில் வேறு வழியில்லாமல் தேவனையே நம்பியிருக்கின்றார்கள். ஆனால், வசதிகள் வாழ்க்கையில் ஏற்படும் காலம் வரும்போது அவர்களுடைய விசுவாச மானது பரீட்சைக்குட்படுத்தபடப் படுகின்றது. அந்த வேளையிலே சிலர் தேவன் சர்வ வல்லமையுள்ளவர் என்றும், குறித்த காலத்திலே, நமக்கு முன்குறித்தவைகளை நிறைவேற்றுவார் என்ற நம்பிக்கையைவிட்டு வழுவிப்போய் விடுகின்றார்கள். தேவனுக்கென்று காத்திருக்ககூடாமல், தேவனுடைய திட்டம் நிறைவேறும்படி தங்கள் மாம்ச சிந்தையினாலே, தேவனுக்கு உதவி செய்ய முற்படுகின்றார்கள். இந்த வரிசையிலே, ஆபிரகாமின் வாழ்க்கையை ஆராய்ந்து பார்ப்போமென்றால், அவனும் அவன் மனைவியாகிய சாராயும் வயது முதிர்ந்தவர்களாகவும், பிள்ளை யற்றவர்களாக இருக்கும் போது, நான் உங்களுடைய சந்ததியை பெருகப் பண்ணுவேன் என்று சர்வ வல்லமையுள்ள தேவனாகிய கர்த் தர் ஆபிரகாமிற்கு வாக்குரைத்தார். ஆண்டுகள் கடந்து சென்ற போது, தேவன் வாக்களித்த சந்ததி சாராய் வழியாக உண்டாக சாத்தியமில்லை என்றும் அது ஒருவேளை மறுமனையாட்டியாகிய ஆகார் வழியாக உண்டாகும் என்று அவன், அவள் வழியாக ஒரு பிள்ளைளை பெற்றெ டுத்தான். ஆனால், கர்த்தரோ, அவன் இல்லை, உன் மனைவியாகிய சாராள் வழியாக உனக்கு ஒரு சந்ததி தோன்றும் என்று மறுபடியும் தன் வாக்குத்தத்தை உறுதிப்படுத்தி, குறித்த காலத்திலே சாராள் வழி யாக ஆபிரகாமிற்கு ஒரு பிள்ளையை கொடுத்தார். எனவே காலம் தாம திக்கின்றது என்று மாம்சத்திலே நீங்கள் கிரியை செய்யாமல், தேவன் முன்குறித்தவைகள் நிறைவேறும்வரை பெறுமையோடு காத்திருங்கள். அவரை நம்பினோர் வெட்கப்பட்டுப் போவதில்லை.

**ரோமர் 10:11**

**அவரை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் வெட்கப் படுவதில்லையென்று வேதம் சொல்லுகிறது.**

**ஜெபம்:** சகலமும் அறிந்த தேவனே, என் வாழ்க்கையிலே வசதிகள் ஏற்படும் போது, என் மாம்ச சிந்தையின்படி நான் செயற்படாதபடிக்கு, நீ என்னை சிந்தையை உமக்குள் காத்துக் கொள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# அறியவேண்டியவைகள்

ஒரு குக்கிராமத்திலே வசித்து வந்த பாட்டியானவள், தன் பேரன்மேல் மிகவும் அன்பு பாராட்டி, அவனுடைய சின்ன வயதிலிருந்து கண்ணும் கருத்துமாக கவனித்து வந்தாள். தான், தன் தேவனாகிய கர்த்தரிடத்தில் கொண்டுள்ள விசுவாசத்தை தன் பேரனும் பற்றிக் கொள்ள வேண்டுமென்று நற்போதனைகளை அனுதினமும் சொல்லிக் கொடுத்து வந்தாள்.பள்ளிக்கூடத்தில்கனிஷ்ட பிரிவின்,படிப்புக்களை முடித்த பின்பு, பேரனானவன், தன் மேற்படிப்புக்காக பட்டணத்த்திற்குச் சென்றான். விடுமுறைநாட்களில்மட்டும் அவன் தன் கிராமத்திற்கு திரும்புவான். இப்படியாகசில ஆண்டுகள் சென்ற பின்பு, அவன் தன் பாட்டியானவளோடு பேசிக் கொண்டிருக்கும் போது, வழமைபோல அந்தப் பாட்டியானவள், நல்லாலோசனைகளை அவனுக்கு சொல்லிக் கொடுத்தாள். பட்டப்படிப்புகளை முடித்து வாலிப பருவத்திலே இருக்கும் பேரனானவனும் தன் பாட்டியை அதிகமதிமாக நேசித்து வந்தான். ஒரு நாள் பேரனா னவன் பாட்டியை நோக்கி: பாட்டி, இந்த உலகத்திலே எத்தனையோ அதிசயங்கள் உண்டு. நீங்கள் அறியாத பல காரியங்கள் பட்டணத்திலே நடைபெறுகின்றது. நீங்களோ உலகத்தையறியாமல் நீங்கள் போட்டுக் கொண்ட வட்டத்திற்குள் வாழ்கின்றீர்களே என்றான். அதற்கு பாட்டியா னவள்: தம்பி, நான் உலக அறிவிலே ஒரு கிணற்றுத் தவளைதான். இந்த உலகத்தினால் உண்டான சில நன்மைகளை அறியாதவளாக நாட்களை முடிக்கப் போகின்றேன். அதே வேளையிலே, பல சீர்கேடும், துன்மார்க்கமும் இந்த உலகிலே மலிந்திருக்கின்றது. அவைகளைநான்அறியாமல்இருப்பதுஎன் ஆத்துமாவிற்குமிகநல்லது. ஆனால், நான் என் இரட்சகராகிய இயேசுவை நன்கு அறிந்திருக்கின்றேன். அவர் வழியாக எனக்கு நித்திய வாழ்வு உண்டு என்று பூரணமாக விசுவாசிக்கின்றேன். நீ இந்த உலகத்திலே எதை அறிந்து கொள்ள மறந்தா லும், ஒன்றான மெய்தேவனாகிய பிதாவையும் அவர் அனுப்பினவராகி இயேசுவையும் அறியாமல் ஒரு கணமும் வாழ்ந்துவிடாதே என்று அறிவுரை கூறினாள். ஆம் பிரியமானவர்களே, நாகரீகமான உலகை அறிய வேண்டும் என்று முயற்சி செய்த பலருக்கு, ஆதியிலே தேவன் மேல் தாம் கொண்ட விசுவாசமானது பின்நாட்களிலே அவர்களுக்கு அநாகரீகமாக தோன்றிய தால் விசுவாசத்தைவிட்டு வழுவி பின்வாங்கிப் போனார்கள். நீங்களோ உலகத்தையல்ல, தேவனை அறிகின்ற அறிவிலே வளர்ந்து பெருகு ங்கள்.

**யோவான் 17:3**

**ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பினவராகிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நித்தியஜீவன்.**

**ஜெபம்**: நித்திய ஜீவனுக்கென்று என்னை அழைத்த தேவனே, இந்த உலகத்தின் அறிவினால் உண்டாகும் வஞ்சகமான வலைக்குள் நான் சிக்கிவிடாதபடிக்கு, உம்மை அறிகின்ற அறிவில் வளர கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

📖 மாலை வாசகம் – எண் 12:1 –10

# கர்த்தர் நம்மோடு பேசுகின்றார்

ஞானமுள்ள பெற்றோர் தங்கள் பிள்ளையின் எல்லாப் பருவங்களிலும் அவர்களோடு உறவு கொண்டாடுகின்றவர்களாக இருக்கின்றார்கள். பிள்ளை எதிர்நோக்கும் ஒவ்வொரு சூழ்நிலைகளிலும் நல்ல ஆலோசனைகளையும், தகுந்த புத்திமதிகளையும் வழங்கின்றவர்களாயும் இருக்கின்றார்கள். ஆலோசனைகயும், புத்திமதிகளையும் வழங்குகின்றார்கள் என்று கூறும்போது, செல்லமாக பேசுகின்ற பருவம் இருந்தது. அரவணைத்துதூக்கிச் சுமக்கும் காலங்கள் இருந்தது. கண்டித்து பேசிய நாட்கள் இருந்தது. சிட்சித்து நடத்தும் நேரங்களும் இருந்தது. நல்ல பெற்றோர் தங்கள் பிள்ளையை நேசிப்பதினால், தங்கள் பிள்ளை நல்வழியிலே வாழ வேண்டும்என்ற விருப்பமுள்ளவர்களாக இருக்கின்றார்கள். ஆனால், பிள்ளையானவன், ஆண்டுகள் கடந்து செல்லும் போது, தன் பெற்றோரின் அறிவுரைகளை அற்பமாக எண்ணிக் கொள்வதால் தவறனா தீர்மானங்களை எடுத்துக் கொள்கின்றான். இது புது யுகம். நாகரீகமான உலகம். வயதானவர்களுக்கு இது புரியாது என்ற எண்ணமுடையவர்களாகவே பிள்ளைகள் மாறிவிடுகின்றார்கள். என் மகனே, உன் தகப்பன் புத்தியைக் கேள், உன் தாயின் போதகத்தைத் தள்ளாதே என்று வேதம் அறிவுரை கூறுகின்றது. அதுபோலவே நம்முடைய பரம தந்தையாகிய தேவன் எப்போதுமே நம்மோடு பேசுகின்றவராக இருக்கின்றார். ஒருவேளை நம்முடைய பூவுல பெற்றோர் நம்மை மறந்து போனாலும், பரலோக தந்தையானவர் நம்மை மறக்கவே மாட்டார். அப்படியானால் சில வேளைகளிலே ஏன் தேவ பிள்ளைகள் தேவசத்தத்தை கேட்க முடியாமல் இருக்கின்றார்கள்? தேவன்தாமே தாம் நியமித்த ஒழுங்கு முறைகளின்படி ஆலோசனைகளையும் அறிவுரைகளையும் வழங்கி வருகின்றார். ஆனால், தேவன் நியமித்தவர்களை அசட்டை செய்வதால், அவர்கள்வழியாக தேவன் கூறும் ஆலோசனைகளையும் தள்ளிவிடுகின்றார்கள். கர்த்தர் அவரோடு மட்டுமா பேசுவார்? என்னோடும் பேசுவார் என்று பெருமைகொள்வதால்தங்கள்இருதயங்களை கடினப்படுத்திக் கொண்டு, காலத்திற்கேற்ப தகுந்த தேவ ஆலோசனைகளை அவர் புறகணித்து விடுகின்றார்கள். பிரியமானவர்களே, மனத்தாழ்மையை அணிந்து கொள்ளுங்கள். தேவ ஆலோசனைகளுக்கு கீழ்படியுங்கள். அப்பொழுது எக்காலத்திலும் நீங்கள் ஞானவான்களாக நடந்து கொள்வீர்கள்.

**நீதிமொழிகள் 1:30**

**என் ஆலோசனையை அவர்கள்விரும்பவில்லை; என் கடிந்துகொள்ளுதலையெல்லாம் அசட்டைபண்ணினார்கள்.**

**ஜெபம்:** என்னோடு பேசும் தேவனே, என் வாழ்நாள் முழுவதும் உம் ஆலோசனையையெல்லாம் தள்ளாமலும், உம்; கடிந்துகொள்ளுதலை வெறுக்காமலும் வாழ உணர்வுள்ள இருதயத்தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# நற்பலன் சமீபித்திருக்கின்றது

யாக்கோபு 5:8

**நீங்களும் நீடிய பொறுமையோடிருந்து, உங்கள் இருதயங்களை ஸ்திரப்படுத்துங்கள்**

பல்கலைக் கழகமொன்றில் விஞ்ஞான அறிவியல் பிரிவில், கல்வியை கற்றுக்கொண்டிருந்த ஒரு மாணவனானவன், தனது இறுதிப் பரீட்சைக்காக ஆயத்தங்களைச் செய்து கொண்டிருந்தான். பல சிரமங்கள் மத்தியில் கடந்த ஆண்டுகளை படித்து முடித்த அந்த மாணவனானவன், கடைசி ஆண்டின் பாடத்திட்டம் மிகவும் கஷ்டமாக இருக்கின்றது என தன் படிப்பை இடை நிறுத்த தீர்மானம்செய்து கொண்டான். அவன் பெற்றோரும், சகோதரரும் அவனுக்கு புத்திமதிகளை சொன்னார்கள். நீ இத்தனை ஆண்டுகளை முடித்துவிட்டாய், இன்னும் சில மாதங்களில் இறுதிப் பரீட்சையை முடித்து, நீ பட்டம் பெற்றுக் கொள்வாய். விஞ்ஞான பிரிவில் நீ படிக்கும் பாடங்கள் இப்போது இருப்பதைவிட கடினமாக இருக்கப்போவதில்லை என்று அவனை உற்சாகப்படுத்தினார்கள். ஆனால், அவனோ தான் படித்து பட்டம் பெறுவது அண்மித்திருந்தபோதும், மதியீனமாக தன் படிப்பை இடை நிறுத்தி பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேறினான். இவ்வண்ணமாகவே சில தேவ பிள்ளைகளும் வாழ்க்கையிலே பல கஷ்டங்களையும் உபத்திரவங்களையும் கடந்து வருகின்றார்கள், தங்கள் பிரயாசத்தின் பலனானது கைகூடும் நாட்கள் அருகில் இருக்கும் போது மதீயீனரைப் போல தங்கள் வாழ்வில் தவறான தீர்மானங்களை எடுத்துக் கொள்கின்றார்கள். இந்த உலகத்திலே உங்களுக்கு உபத்திரவங்கள் இல்லை என்று தேவனானவர் ஒருபோதும் நம்மிடம் கூறவில்லை. நம்முடைய வாழ்க்கையில் நாம் எதிர்நோக்கும் எந்த சூழ்நிலையானாலும் நான் உங்களை கைவிடுவதில்லை என்பதே அவர் நமக்கு கொடுத்த வாக்குத்தத்தமாக இருக்கின்றது. மேற்கூறிய சம்பவத்திலுள்ள மாணவனானவன் தன் இரண்டு காரியங்களை குறித்து கவனமுள்ளவனாக இருந்திருக்க வேண்டும். முதலாவதாக, உபத்திரவங்களை சகி க்காமல் முடிசூடப்பட முடியாதென்பதையும், அதாவது சவால்களும் உபத்திரவங்களும் இல்லாத நல்வாழ்வு இந்த உலகத்திலே இல்லை. இரண்டவதாக, அவன் சகிப்புத்தன்மையை குறித்து அனுபவரீதியாக கற்றுக் கொள்ள வேண்டும். நம் வாழ்க்கையில் சவால்கள் நம்மை நோக்கி வரும்போது, நாம் எளிதில் அந்த சமுகத்தையோ, சபையையோ, குடும்பத்தையோ, உறவுகளையோ, நண்பர்களையோ, சகஊழியர்களை விட்டு விலகாதபடிக்கு,நீடியபொறுமையுள்ளவர்களாய்இருக்க கற்றுக் கொள்ள வேண்டும். நற்பலனை அறுக்கும் காலம் சமீபித்திருக்கின்றது என்று அறிந்தவர்களாக நம் கர்த்தருக்காக நீடிய பொறுமையோடு காத்திருப்போமாக.

**ஜெபம்:** உன்மேல் என் கண்ணை வைத்து, உனக்கு ஆலோசனை சொல்லுவேன் என்று கூறிய தேவனே, உபத்திரவங்களிலே பொறுமையாய் இருக்க நீர் எனக்கு கற்றுத் தந்து வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# இலக்கை நோக்கிய பயணம்

சில தசாப்தங்களுக்கு முன், தன் மனைவி பிள்ளைகளோடு, தன் சொந்த தேசத்தைவிட்டு, மேற்கத்தைய நாடொன்றிற்கு குடியேறிய நடுத்தர வயதையுடைய மனிதனொருவன், குடும்பத்தின் பிழைப்புக்காக வேலை தேடித்திரிந்தான். உத்தியோகங்கள் செய்வதற்கு அவனுக்கு படிப்போ பட்டமோ இல்லை. விரும்பத்தக்க ரூபமும் அவனுக்கிருக்கவில்லை.வேலை செய்யும் இடத்திலே கஷ்டங்கள் உண்டாகலாம் என்றும், பாஷை காரணமாக மனிதர்கள் மத்தியிலே அவமானமடைய நேரிடலாம் என்பதும் அவனுக்கு தெரியும் ஆனாலும், அவையயொன்றையும் பொருட்படுத்தாமல்,தான் ஏதோ ஒரு வேலையை செய்து, தன் குடும்பத்தின் விவகாரங்களை கவனிக்க வேண்டும் என்பதே அவனுடைய ஒரே நோக்கமாக இருந்தது. அந்த குறிக்கோளை நோக்கினஅவன் நிதானமாய் பயணம் செய்தான். ஆம் நம்முடைய நேச மீட்பராகிய இயேசு, சுமார் முப் பத்து மூன்றரை வருடங்கள் இந்த பூமியிலே வாழ்ந்தார். பாடுகள், துன்பங்கள், அவமானங்கள், நிந்தைகள், இரத்தம் சிந்துதல், கொடூரமான பகிரங்க மணரம் தனக்கு உண்டு என்று அறிந்திருந்தும், அந்த நாளுக்காக கல்வாரியை நோக்கி பயணம் செய்தார். அவர் தன் குறிக்கோளைவிட்டு சறறேனும் விலகவில்லை. கல்வாரியை நோக்கிய பயணத்தைவிட்டு அவர் வெளியேறவில்லை. தன்னுடைய சித்தப்படியல்ல, தன்னை அனுப்பினவராகிய அவர் தம் பிதாவின் சித்தம் நிறைவேற்றுவதே அவருடைய ஒரே நோக்கமாக இருந்தது. அவர் அதை சம்பூரணமாக நிறை வேற்றி முடித்தார். நம்முடைய வாழ்க்யிைலும் பிதாவாகிய தேவனானவர், நமக்கு ஒரு சம்பூரணமான திட்டத்தை வைத்திருக்கின்றார். அந்த திட்டத்தின் பாதையிலே சவால்களும் உபத்திரங்களும் உண்டு. அதைக் குறித்து மனத்தெளிவுள்ளவர்களாக இருக்கின்றீர்களா? சுவிஷே சத்தின் நிமித்தம் குடும்பத்தில், சபையில், உறவுகள் மத்தியில், வேலை செய்யும் இடங்களில்,பாடுகளைசகித்துக் கொள்ள ஆயத்தமா? புதிய நாட்டிற்கு குடியேறிய மனத்தாழ்மையுள்ள மனிதனைப் போல, நாமும் நம் மீட்பராகிய இயேசுவைப் போல, நமது இலக்கை நோக்கி முன்னேறுவோமாக. நாம் செல்லும் பாதையிலே தூய ஆவியா னவரின் துணை உண்டு. அதன் முடிவிலே மகிமையின் கிரிடம் நமக்குண்டு.

**2 தீமோத்தேயு 4:5**

**நீயோ எல்லாவற்றிலும் மனத்தெளிவுள்ளவனாயிரு, தீங்கநுபவி, சுவிசேஷகனுடைய வேலையைச் செய், உன் ஊழியத்தை நிறைவேற்று.**

**ஜெபம்:** பரிசுத்தமுள்ள தேவனே, கோணலும் மாறுபாடுமான சந்ததி நடுவிலே கறையற்ற வாழ்க்கை வாழ்ந்து, இருளடைந்திருக்கும் உலகத்திலே உம்முடைய வெளிச்சத்தை வீசும்படி என்னை நடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# எனக்கு ஏற்ற இடம் எது?

ஆதியிலே சத்தியதைகக் கைக்கொண்டு தங்கள் இலக்கை நோக்கி நன்றாக ஓடியவர்கள், பாதி வழியிலே, தங்கள் உலக வாழ்க்கையின் பாணிக்கு (Life Style) ஏற்றபிர காரமான சபைகளைத் தேடுகின்றார்கள். ஏனென்றால், ஆரோக்கியமான உபதேசமானது, தங்கள் தனிப்பட்ட வாழ்கையோடு (Personal Life) முட்டி மோதிகின்றதென்பதையுணர்ந்து சத்தியமான உபதேசத்திற்கு ஏற்ப தங்கள் பாணியை மாற்றிக் கொள்ள மனதற்றவர்களாக, செவித்தினவுள்ளவர்களாகி, சுய இச்சைகளுக்கேற்ற "நீயும்சரி, நானும் சரி, எல்லோரும் சரி" என்றுபோதிக்கும் போதகர்களை தேடிக் கண்டு பிடிக்கின்றார்கள். தாங்க ளும் கிறிஸ்தவர்கள் என்ற போர் வையைப் போர்த்துக் கொண்டு, தங்களது உலக வாழ்க்கையின் நோக்கங்களை எதுவித குற்ற உணர்வுமின்றி நிறைவேற்ற மன துள்ளவர்களாக இருக்கின்றார்கள். சுயஇச்சைகள் என்று கூறும் போது, இவர்கள் குடித்து, வெறித்து, துன்மார்க்கமாய் வாழ்பவர்கள் என்பது பொருளல்ல. தாங்கள் அடைந்து கொண்ட கல்வி, வேலை, புதிய அந்தஸ்து, புதிய நண்பர்கள், பழைய உறவுகள் இவைகளுக்கு ஏற்ப போதனைகளை தேடுகின்றார்கள். விசுவாச மார்க்கத்தார் சத்தியத்துக்குச் செவியை விலக்கி, கட்டுகதைகளுக்குச் சாய்ந்து போகும் காலம் வரும் என்று சத்திய வேதத்திலே பார்க்கின்றோம். இப்படிப்பட்டவர்களும் தங்கள் வழிகளை நியாப்படுத்திக் கொள்கின்றார்கள். அப்படியானால் அவர்களை எப்படி அறிந்து கொள்வது? "நல்ல மரமானது கெட்ட கனி கொடாது, கெட்ட மரமானது நல்ல கனி கொடாது. அந்தந்த மரம் அதன தன் கனியினால் அறியப்படும் முட்செடிகளில் அத்திப்பழங்களைப் பறிக்கிறதுமில்லை, நெருஞ்சிச் செடியில் திராட்ச ப்பழங்களைப் பறிக்கிறதுமில்லை" என்று ஆண்டவராகிய இயேசு கூறியிருக்கின்றார். அவர்களை பின்தொடர்ந்து, அவர்களை குறித்து ஆராய்ச்சி செய்வதிலே நம் வாழ்நாட்களை கழிப்பது நம்முடைய நோக்கம் அல்ல. மாறாக, சத்தியத்தை தங்களைவிட்டு வில க்கிக் கொள்கின்றவர்களை நாம் விட்டு விலகி, அவர்களுடைய ஆவிக்குரிய தொற்று நோய் நம்மையும் வஞ்சிக்காதபடிக்கு நம்முடைய சிந்தையை நாம் காத்துக் கொள்ள வேண்டும். தேவ பிள்ளைகளே, உங்களுக்கேற்ற சத்தியத்தைத் தேடாமல், தேவனுடைய சத்தியத்திலே உறுதியாய் நிலைத்திருந்து கிறிஸ்து இயேசுவுக்குள் நல்ல கனிகளை கொடுங்கள்.

**எபேசியர் 4:14**

மனுஷருடைய சூதும் வஞ்சிக்கிறதற்கேதுவான தந்திரமுமுள்ள போதக மாகிய பலவித காற்றினாலே அலைகளைப் போல அடிபட்டு அலை கிற வர்களாயிராமல்

**ஜெபம்:** அன்பின் தேவனே, இச்சையினால் உலகத்திலுண்டான கேட்டுக்குத் தப்பி, திவ்விய சுபாவத்துக்குப் பங்குள்ளவர்களாகும்பொருட்டு, உம் சத்திய வசனத்திலே நிலைத்திருக்க எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# அர்ப்பணிப்பு

ஒரு ஊரிலே வசித்து வந்த விசுவாசியானவன், தன் பிழைப்புக்காக தன் வீட்டிற்கு பின்புறமாக ஒரு சிறிய வாழைத்தோட்டதை வைத்திருந்தான். அந்த ஊரிலே வசித்து வந்த விவசாயிகள், தங்கள் அறுவடைகளை சந்தைப்படுத்தும்படிக்கு ஞாயிறுதோறும் காலையிலே கூடிவருவார்கள். அந்த சந்தையானது பட்டணத்திற்கு அருகில் இருந்ததால், பொருட்கள் யாவும், சீக்கிரமாக நல்ல விலைக்குவிற்று தீர்க்கப்பட்டுப் போய்விடும். காரியம் அப்படியிருந்தாலும், அந்த விசுவாசியானவன், வாரத்திலே ஏழு நாட்கள் உண்டு, ஞாயிறு காலை தான் தன்னை படைத்த ஆண்டவரை சந்திக்கும் நேரம் என்று தன் அறுவடையின் பலனை வேறு நாட்களிலே சந்தைப்படுத்தி, தான் ஆதியிலே கொண்ட அன்பின் அர்ப்பணிப்பிலே வைராக்கியமாக இருந்து வந்தான். அவனுடைய பிள்ளைகளிலொருவன் வளர்ந்து, தன் தந்தையின் தோட்டத்தை பெருப்பித்தான். கணனி ஊடக வழியாக, அறுவடைகளை சந்தைப்படுத்தும்படி பல நவீன சந்தைப்படுத்தும் வழிகளை அவன் பயன்படுத்தி வந்தான். வியாபாரமானது நன்றாக விருத்தியடைந்து வந்தது. கிழமை நாட்களிலே வியாபார அலுவலாக பட்டணங்களுக்கு சென்று வந்த அவன், பட்டணத்திலுள்ள சில முக்கிய பிரமுகர்களை ஞாயிற்று கிழ மைகளிலே அவர்களுடைய வசதியின்படி சந்திக்க வேண்டும் என்று அறிந்து கொண்டான். அதற்காக, தன் ஆராதனை நேரங்களை மாற்றிக் கொண்டான். தான் செல்லும் பட்டணங்களிலே, ஞாயிறு காலையி ல்லையென்றால், ஞாயிறு மத்தியானம், ஞாயிறு மத்தியானம் இல்லையென்றால், ஞாயிறு மாலை, ஞாயிறு மாலையில்லையென்றால் சனிக் கிழமை மாலை என்று பட்டணத்திலே தனக்கு தென்படும் ஏதோ ஒரு ஆலயத்திற்கு சென்று வந்தான். அவனுடைய எண்ணப்படி ஏதோ ஒரு ஆலயதிற்கு, ஏதோ ஒரு நாளிலே சென்று வந்தால் போதும் என்று ஆலயத்திற்கு செல்வதால் தான் தேவனுக்கு தான் உதவி செய்கின்றேன் என்ற எண்ணமுடையவனான். இப்படிப்பட்டவர்களிடம் தேவ அன்போ, தேவ பயமோ இல்லை. தேவனுடைய வார்த்தை இவர்கள் இருதயத்தில் விழுந்து, முளைத்து, பலன் கொடுப்பதற்கு, இப்படிப்பட்டவர்களின் இருதயம் பண்படுத்தப்படவில்லை. இந்த உலகமானது, தகப்பனானவனைவிட மகனானவன் அறிவுள்ளவன் என்று மெச்சிக் கொள்ளும். ஆனால் இப்படிப்பட்வர்கள், உலக ஐசுவரியத்திற்காக தேவனுடைய காரியங்களை மாற்றியமைப்பதற்கு தயக்கம் கொள்ளமாட்டர்கள். நீங்களோ, கற்றவைகளில் உறுதியாய் நிலைத்திருங்கள்.

**2 தீமோத்தேயு 3:14**

**நீ கற்று நிச்சயித்துக்கொண்டவைகளில் நிலைத்திரு;**

**ஜெபம்:** மேலானவைகளை தேடுங்கள் என்று சொன்ன தேவனே, கிறிஸ்துவை பற்றி வாழும் வாழ்க்கையின் மேன்மையை உணர்ந்தவனாக நான் அர்ப்பணிப்போடு எப்போதும் வாழ கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# உயர்வோ தாழ்வோ

இந்த உலகிலே பொதுவாக மனிதர்கள் கஷ்டத்துடனும், வறுமையுடனும் வாழ்வதைவிட செழிப்புடனும், ஐசுவரியத்துடனும் வாழ்வதையே விரும்புகின்றார்கள். சிலர் கஷ்டத்தையும் வறுமையும் சாபம் என்றும், செழிப்பையும் ஐசுவரியத்தையும் ஆசீர்வாதம் என்றும் வகையறுத்து தங்கள் கருத்துக்களை கூறுகின்றார்கள். அப்படியானால், இந்த உலகத்திலே கோடீஸ்வரராக மாளிகைகளில் வாழ்கின்றவர்கள் யாவரும் ஆசீர்வதிக்கப்பட்டவர்களா? என் பிரியமான சகோதரரே, கேளுங்கள் தேவன் இவ்வுலகத்தின் தரித்திரரை விசுவாசத்தில் ஐசுவரியவான்களாகவும், தம்மிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குத் தாம் வாக்குத்தத்தம்பண்ணின ராஜ்யத்தைச் சுதந்தரிக்கிறவர்களாகவும் தெரிந்துகொள்ளவில்லையா? நீங்களோ தரித்திரரைக் கனவீனம்பண்ணுகிறீர்கள். ஐசுவரியவான்களல்லவோ உங் களை ஒடுக்குகிறார்கள்? அவர்களல்லவோ உங்களை நியாயாசனங்க ளுக்கு முன்பாக இழுக்கிறார்கள்? உங்களுக்குத் தரிக்கப்பட்ட நல்ல நாமத்தை அவர்களல்லவோ தூஷிக்கிறார்கள் என்று பரிசுத்த வேதாகமத்திலே வாசிக்கின்றோம். தேவனுடைய ஊழியராகிய பவுல் என்பவர், பிரயாசத்திலும், வருத்தத்திலும், அநேகமுறை கண்விழிப்புகளிலும், பசியிலும் தாகத்திலும், அநேக முறை உபவாசங்களிலும், குளிரிலும், நிர்வாணத்திலும் இருந்தார். மேலும், கர்த்தருடைய ஊழியர்கள் சிறையில் போடப்பட்டு, பல துன் பங்களை அனுபவித்து, இரத்த சாட்சிகளாக மரித்தார்கள் என்பதை நாம் அறிந்திருக்கின்றோம். ஆனால் அவைகள் மத் தியிலும் அவர்கள் தேவன்மேல் கொண்ட விசுவாசத்திலே உறுதியாய் இருந்து, தேவ சமா தானத்துடன் தங்கள் திருப்பணியை நிறைவேற்றி முடித்தார்கள். அது மட்டுமல்லாமல், தங்களுக்கு உண்டான உபத்திரவங்களை பொரு ட்படுத்தாமல், விசவாசிகளுக்கு உண்டாகும் சோதனைகளிலே அவர்கள் தளர்ந்து போகக்கூடாது என்று, கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாக இருங்கள் என்று அறிவுரை கூறியிருக்கின்றார்கள். பிரியமானவர்களே, தேவனால் கூடாத காரியம் ஒன்றுமில்லை. தேவனுக்கு பயந்து அவரு டைய சீஷர்களாக இருந்த ஒரு சில ஐசுவரியவான்களை வேதத்திலே காண்கின்றோம் அதனால் மனுஷர்களுக்கு உண்டாயிருக்கும் உலக ஐசுவரியமெல்லாம் தேவனால் உண்டானதில்லை. எந்த சூழ்நிலையிலும் தேவனைச் சார்ந்து வாழ்வதிலேயே உறுதியாய் இருங்கள். நம்மை பெலப்படுத்துகின்ற ஆண்டவராகிய இயேசு எல்லா சூழ்நிலைகளிலும் மனரம்யமாக இருக்க நமக்கு பெலன் தருகின்றார்.

**பிலிப்பியர் 4:12**

தாழ்ந்திருக்கவும் எனக்குத் தெரியும், வாழ்ந்திருக்கவும் எனக்குத் தெரியும்;

**ஜெபம்:** இரக்கத்தில் ஐசுவரியமுள்ள தேவனே, உலகத்தின் போக்கில் நான் வாழாதபடிக்கு, உம்முடைய வார்த்தையின் வழியிலே நான் எப்போதும் உறுதியுள்ளவனாக இருக்க எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# பரிபூரணமான நிலையை அடைதல்

எளிமையான வாழ்க்கை வாழும் ஒரு விசுவாசியானவன், அனுதினமும் அதிகாலையிலே எழுந்திருக்கும் போது, இன்றைய நாளுக்குரிய ஆகாரத்தை எங்களுக்கு தந்தருளும் என்று பிதாவாகிய தேவனை அவன் வேண்டிக் கொள்வான். ஆவிக்குரிய ஆகாரத்தை மட்டுமல்ல, அன்றன்றைய நாளுக்குரியவைகளை தேவன தன் குடும்பத்திற்கு கொடுத்தருள வேண்டும்எனவிசுவாசத்தோடு காத்திருப்பான். தன் தோட்டத்தின் பிரயாசங்களின் பலனை, சந்தைப்படுத்த அடுத்து ஊருக்கு செல்வதற்கு தனக்குவழியுண்டாகவேண்டு மென தேவனிடம் கேட்டுக் கொள்வான்.

**சங்கீதம் 128:1**

**கர்த்தருக்குப் பயந்து, அவர் வழிகளில் நடக்கிறவன் எவனோ, அவன் பாக்கியவான்.**

இப்படியானதொரு எளிமையான வாழ்க்கையைவாழ்ந்த போதும், அவன் தேவனோடு நடந்து சென்றான். காலங்கள் கடந்து சென்றதும், அவனுடையநீதியான பிரயாசத்தினாலே அவனுக்கு பலன் உண்டாயிற்று. தேவ அனுக்கிரகத்தினாலே உலக ஐசுவரியத்தினாலும் அவன் ஆசீர் வதிக்கப் பட்டு பரிபூரணம் அடைந்தான். இப்போது, என்னவெனில் அதிகாலையிலே எழுந்து இன்றைக்குரிய ஆகாரத்தை எங்களுக்கு தந்தருளும் என்று அவன் தேவனிடம் வேண்டிக் கொள்வதில்லை. தான் அறிக்கையிட்டது தனக்கு நடைபெறும் என்று விசுவாசித்து காத்திருக்க வேண்டியதுமில்லை. முன்னைய நாட்களிலே அனுதினமும் தேவனோடு நடந்து செல்வதற்கு அவனுடைய தேவைகளே அவனுக்கு உதவியாக இருந்தது. இப்போது, அவன் காலையிலே எழுந்து தேவனோடு உறவாடுவதற்கு அவனுக்கு தேவைகளிருக்கவில்லை. தனக்குண்டானவைகளை பெருக்குவதற்கும், செலவு செய்வதற்கும், தன் செல்வத்தை திருடர்களிடமிருந்து காத்துக் கொள்வதற்கும் திட்டங்கள் போடுவதிலேயே அவன் அதிக நேரத்தை செலவிடவேண்டியிருந்தது. பரிபூரணமடைந்தால், தேவனோடு நடக்க முடியாது என்பது பொருளல்ல, ஆனால், தேவனோடு நடப்பதற்கு உறுதியான தீர்மானம் செய்து கொண்டு, யோபுவைப் போல, தேவபயத்தோடு, உத்தமமான வழியிலே நடந்து, அவன் தன் வாழ்க்கையை அவன் தேவ வார்த்தைகளின்படி காத்துக் கொள்ள வேண்டும். தேவனாகிய கர்த்தர் தாமே சாலொமோன் ராஜாவுக்கு, ஞானமும் விவேகமும் கொடுத்ததுமல்லாமல், திரளான ஐசுவரியத்தையும் சம்பத்தையும் கனத்தை யும் கொடுத்து அவனை ஆசீர்வதித்தார். தேவ ஞானம் அவனுக்கிருந்த போதும், அவனுக்குண்டான பரிபூரணமான வாழ்க்கை அவனை தேவனைவிட்டு தூரம் போக செய்தது. உயர்வோ, தாழ்வோ, எந்நிலை யோ, நீங்கள் எப்போதும், கர்த்தருக்கு பயந்து அவருடைய வழியிலே உத்தமமாக நடக்கும் பாக்கியவான்ளாக இருங்கள்.

**ஜெபம்:** ஆசீர்வதிக்கும் தேவனே, இந்த உலகத்தில் எனக்கு உண்டாகும் பரிபூரணத்தினால் நான் உம்மை மறந்து போகாதப்டிக்கு நீர் எனக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்து என்னை காத்துக் கொள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# தேவைகளினால் உண்டாகும் நெருக்கம்

அன்றன்றைய நாளுக்குரிய தேவைகளுக்காக உழைத்து வந்த ஒரு விசுவாசியானவன், தன் கடும் பிரயாசத்தின் பலனினாலே தன்னுடைய குடும்ப விவகாரங்களை கவனித்து வந்தான். நாட்டின் அமைதியற்ற சூழ்நிலைகளினால், சகலருக்குமான வேலை வாய்ப்பு குறைந்து போனது. அன்றாட ஆகாரத்திற்குரிய உணவுப் பொருட்களின் விலைவாசிகள் அதிகரிக்க ஆரம்பித்தது. பிழைப்புக்களுக்காக சூழ இருந்த மனிதர்களில் சிலர், மற்றவர்களுடைய தோட்டங்களுக்கு சென்று, களவாக சில காய்கறிகளை எடுத்து, சந்தையில் விற்று பிழைத்துக் கொண் டார்கள். தரித்திரத்தினால் உண்டான நெருக்கமானது, அந்த விசுவாசியானவனை மிகவும் வாட்டியதால், தான் அந்த மனிதர்களோடு இணைந்து கொள்வோமோ என்று தன் படுக்கையிலே இருந்து சிந்தித்துக் கொண்டிருந்தான். ஆனால், திடீரென்று "விசுவாசி அவனென்றும் பதறான். அவன் நங்கூரம் இயேசுவில் உண்டு" என்ற ஒரு அழகான பாடலின் வரிகள் தன் மனதில் ஒலித்ததை உணர்ந்தான். உடனடியாக அவன் முழங்காலிலே நின்று, கர்த்தாவே, தரித்திரத்தினாலே நான் திருடி, என் தேவனாகிய உம்மு டைய நாமத்தை வீணிலே வழங்காதபடிக்கு, என் படியை எனக்கு அள ந்து என்னை போஷித்தருளும் என்று ஜெபித்தான். அவன் கர்த்தருடைய வேளைக்காக காத்திருக்க தீர்மானித்தான். பிரியமானவர்களே, ஆகாயத்துப் பட்சிகளைக் கவனித்துப்பாருங்கள் அவைகள் விதைக்கிறதுமில்லை, அறுக்கிறதுமில்லை, களஞ்சியங்களில் சேர்த்துவைக்கிறதுமில்லை அவைகளை யும் உங்கள் பரமபிதா பிழைப்பூட்டுகிறார் அவை களைப்பார்க்கிலும் நீங்கள் விசேஷித்தவர்கள் அல்லவா? ஆகையால், என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம், என்னத்தை உடுப்போம் என்று கவலைப் படாதிருங்கள். இவைகளையெல்லாம் அஞ்ஞானிகள் நாடித் தேடுகிறார்கள் இவைகளெல்லாம் உங்களுக்கு வேண்டியவைகள் என்று உங்கள் பரமபிதா அறிந்திருக்கிறார் என்று நம்முடைய கர்த்த ராகிய இயேசு கூறியிருக்கின்றார். எனவே, இந்த உலகத்தின் தேவை களுக்காக, நீங்கள் உங்கள் ஆத்துமாவை வஞ்சித்து, தேவ ராஜ்யத் தையும், அதன் நீதியையும் தேடுவதை விட்டுவிடாதிருங்கள். சிங்கக்குட்டிகள் தாழ்ச்சியடைந்து பட்டினியாயிருக்கும் கர்த்தரைத் தேடு கிறவர்களுக்கோ ஒரு நன்மையுங் குறைவுபடாது. எனவே, திடமனதோடு கர்த்தருடைய வேளைக்காக காத்திருங்கள்.

**சங்கீதம் 27:14**

**கர்த்தருக்குக் காத்திரு; அவர் உன் இருதயத்தை ஸ்திரப்படுத்துவார்; திடமனதாயிருந்து, கர்த்தருக்கே காத்திரு**

**ஜெபம்:** பஞ்சகாலத்திலே திருப்தியாக்கும் தேவனே, என் குறையிலே நான் உம்மை மறுதலிக்காதபடிக்கு, விசுவாசத்திலே உறுதியாக இருந்து, உம்முடைய வேளைக்காக காத்திருக்க கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழி யாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# ஐசுவரியம் மிகுதியாயிற்று...

ஒரு ஊரிலே வாழ்ந்து வந்த இரண்டு சகோதரர்கள் உண்மையும் உத்தமமான வழியிலே நடந்து வந்தார்கள். அவர்களுடைய கைகளின் பிரயாசத்தை தேவன் ஆசீர்வதித்ததால், அவர்களுகு உலக ஐசுவரியம் பெருக ஆரம்பித்தது. முன்னைய நாட்களிலே தன் பெற்றோரும், குடுத்பத்தினரும் பட்ட கஷ்டங்களை மனதிற் கொண்டவனாய், அவன் தனக்குண்டான செல்வத்தில் மிகுதியானவைகளை, ஊரிலுள்ள ஏழை, எளியவருக்குதாராளமாய் கொடுத்து வந்தான். அவன் தன்னுடைய பரமதந்தையைப் போல இரக்கத்தில் ஐசுவரியமுள்ள வனானான். இளையவனோ, தேவன் தன் செல்வத்தை பெருக்கப்ப பண்ணினார் என்று, காணிகளையும் நிலங்களையும் வாங்கி, மிகுதியானவைகளை பங்குச் சந்தையிலே முதலீடு செய்து, தனக்கும் தன் குடும்பத்திற்கும் சேர்த்து, அந்த ஊரிலே மிகுந்த ஆஸ்தியுள்ளவனானான். ஆனால், மன இரக்கத்திலோவென்றால் தரித்திரமுள்ளவனான். அநேக ஆண்டுகளுக்கு பின்னர், மூத்தவன் மரித்து, அடக்கம் செய்யப்பட்டான். அவனுடை பிள்ளைகளும், ஊரிலுள்ள மனிதர்களும் அவனுடைய வாழ்விற்காக பிதாவாகிய தேவனுக்கு கண்ணீரோடு நன்றி செலுத்தினார்கள். வாரியிறைத்தான், ஏழைகளுக்குக் கொடுத்தான், அவனுடைய நீதி என் றென்றைக்கும் நிற்கும் என்று எழுதியிருக்கிறபடி அவனுக்கு உண் டாயிற்று என்று கூறி அவனைக் குறித்து சாட்சி பகின்றார்கள். இளையவனும் வயது சென்று பெலவீனமுற்றிருக்கும் நாட்களிலே தன் ஆஸ்திகளை தங்களுக்கிடையே பங்கிட்டுக் கொள்வதற்காக தன்னுடைய பிள்ளைகள் ஓயாமல் சண்டை செய்து கொண்டிருப்பதை கண்டு மிகவும் மனவேதனை அடைந்தான். ஆண்டுகள் கடந்து அவன் மரித்துப் போன பின்பும், பிள்ளைகள் மத்தியிலே வழக்குக்கும், வாதுக்கும், கலகத்திற்கும் ஒய்வில்லாமல் இருந்தது. பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது. சிலர் அதை இச்சித்து, விசுவாசத்தைவிட்டு வழுவி, அநேக வேதனைகளாலே தங்களை உருவக் குத்திக்கொண்டிருக்கிறார்கள் என்ற வார்த்தையின்படி இளைவனுடைய சந்ததி, சோதனையிலும் கண்ணியிலும், மனுஷரைக் கேட்டிலும் அழிவிலும் அமிழ்த்துகிற மதிகேடும் சேதமுமான பலவித இச்சைகளிலும் விழுந்து போனார்கள். பிரியமானவர்களே, ஐசுவரியமானாலும், வறுமையானாலும், பிதாவாகிய தேவனு டைய சித்தத்தை நிறைவேற்றி, பரலோகத்திலே நமக்கு செல்வத்தை சேர்த்து வைப்பதே நம்முடைய நோக்கமாக இருக்கட்டும். நித்தியமானதும் அழியாத மேலானதுமான காரியங்களிலே முதலீடு செய்யுங்கள்.

**1 தீமோத்தேயு 6:6**

**போதுமென்கிற மனதுடனே கூடிய தேவபக்தியே மிகுந்த ஆதாயம்.**

**ஜெபம்**:நித்திய வாழ்விற்கு என்னை அழைத்த தேவனே, ஐசுவரியத்தின் மயக்கத்தினால்நான் உணர்வற்றுப் போய்விடாதபடிக்கு, நாட்களை எண்ணும் அறிவை தந்து, காலத்தை ஆதாயப்படுத்திக் கொள்ளும்படி எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# பிரகாசமுள்ள நட்சத்திரம்

> **ரோமர் 8:29**
>
> **தேவன் எவர்களை முன்னறிந்தாரோ அவர்களைத் தமது குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு முன்குறித்திருக்கிறார்**

ஒரு ஊரிலே வாழ்ந்து வந்த வாலிபனொருவன், தன் சிறுபிராயத்திலிருந்தே, தனக்கு பிரியமான விளையாட்டு துறையிலுள்ள நட்சத்திர வீரனை (Sports Star) போல தன் உடலை பேண வேண்டும் என விரும்பி, தினமும் உடற்பயிற்சி நிலையத்திற்கு சென்று பல பயிற்சிகளை செய்து வந்தான். அவனுடைய மாதிரியாக (Model) இருந்த விளையாட்டு வீரனைப் போல, அவனுடைய வெளித்தோற்றமும் மாற்றமடைய ஆரம்பித்தது. தன்னுடைய முயற்சியின் பலனைக்கண்டு அவன் பெருமிதம் அடைந்தான். அவனுடைய தோற்றம் அவனுடைய தன்நம்பிக்கையாக மாறிவிட்டது. நம்முடைய மாதிரி யார்? நம்முடைய நட்சத் திரம் யார்? நம்முடைய மீட்பராகிய இயேசுவே நமக்கு பிரகாசமுள்ள விடிவெள்ளி நட்சத்திரமாயிருக்கின்றார். வானத்திலே இருக்கும் எண்ணற்ற நட்சத்திரங்களும், இந்த பூமியிலேதோன்றும்மனிதநட்சத்திரங்களும் நிலையற்றவைகள். ஆனால், நம்முடைய பிரகாமுள்ள விடிவெள்ளி நட்சத்திரமாகிய இயேசு கிறிஸ்து, இருக்கிறவரும் இருந்தவரும்வருகிறவருமாகிய சர்வவல்லமையுள்ள கர்த்தர்: அவர் அல்பாவும், ஓமெகாவும் ஆதியும் அந்தமுமாயிருக்கிறார். இந்த உலக நட்சத்திரங்கள் தங்கள் புகழுக்கும், பெருமைக்கும், ஆஸ்தியை விருத்தி செய்வதற்கும் இரசிகர்களை திரளாக்கி கொள்கி ன்றார்கள். ஆனால் நம்முடைய கர்த்தராகிய இயேசுவோ, நம்மிடத்தில் அன்புகூர்ந்து, தமது இரத்தத்தினாலே நம்முடைய பாவங்களற நம்மைக் கழுவி, தம்முடைய பிதாவாகிய தேவனுக்கு முன்பாக நம்மை ராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கியிருக்கின்றார். தம்மைப் பின்பற்றுகின்ற யாவரும் தம்மைப்போல மாற வேண்டும் என்று விரும்புகின்றார்கள். ஏழை எளியவர், உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்ற வேற்றுமைகளை இந்த உலக நட்சத்திரங்கள் காண்பிக்கிறார்கள். ஆனால், நம்முடைய கர்த்தரோ, ஒருவனும் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடைய வேண்டும் என்ற சித்தமுள்ளவராக இருக்கின்றார். எனவே, அந்த வாலிபன் மன வாஞ்சையோடு, தன் வெளித்தோற்றத்தை மாற்ற பெரும் பிரயாசப்பட்டதைவிட, நாமும் நம்முடைய உள்ளான மனிதன் இயேசுவைப் போல மாறும்படிக்காய் நாம் இன்னும் அதிகமாக பிரயாசப்பட வேண்டும். பாடுகள் துன்பங்களின் நாட்களிலும், சோர்ந்து போகாமல், நம்முடைய மாதிரியாகிய இயேசுவின் தெய்வீக சுபாவங்கள் நம்மில் உருவாகும்படி க்கு நம்மை நாம் ஒப்புகொடுப்போமாக.

**ஜெபம்:** அழியாமைக்கென்று என்னனை அழைத்த தேவனே, அழிந்து போகின்ற இந்த உலகத்தின் காரியங்களுக்காக நான் பிரயாசப்படாமல், இயேசுவின் சாயலிலே வளர கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

**ஞாயிறு | சித்திரை 30** | 📖 மாலை வாசகம் – எபேசியர் 4:24

# மனதிலே உண்டான மாற்றம் என்ன?

ஒரு ஊரிலே வாழ்ந்து வந்த மனிதனானவன், தன்னுடைய வழிகள், கொள்கை கோட்பாடுகளைக் குறித்து விமர்சிக்கின்ற எந்த மனிதன் மேலும் சீக்கிரமாய் கோபமடைந்து, அவர்கள் வாயை அடக்கும்படிக்கு கடுமையான தொனியிலே அவர்களை எதிர்த்து வாதம் செய்கின்ற வனாக இருந்து வந்தான். தன்னுடைய விவாதத்தின் வலிமையை குறித்து அவன் தனக்குள்ளே பெரு மைபாராட்டி வந்தான். பல ஆண்டு களுக்கு பின்னர், அவன் ஆண்டவ ராகிய இயேசுவை ஏற்றுக் கொண்டு இரட்சிப்படைந்தான். ஒருநாள் அவ னுடைய அயலில் வசிக்கின்ற மனி தனொருவன், அவனுடைய மனமா ற்றத்தையும், இரட்சிப்பையும், இயேசுவையும் குறித்து விமர்சித்து பேசினான். அதை கேட்டவுடனே இவன் மிகவும் கோபமடைந்து, அந்த அயலவனின் மார்க்கத்தையும், அவன் வாழ்க்கை முறையையும் குறித்து கடும் வார்த்தைகளை கூறி அவனுடைய வாயை அடக்கி விட்டான். அன்றிரவு, அவன் படுக்கைக்கு சென்றபோது அவன் மனதிலே சமா தானம் இல்லை. அவனுக்கு ஒழுங்காக தூங்க முடியவில்லை. காலை யிலே எழுந்திருந்த போது, தன்னுடைய பரிதாபமான நிலைமையை உணர்ந்து கொண்டான். உன் சகோதரனை பகைக்காதே என்று சொன்ன இயேசு, உன் பிறனை நேசி என்று கூறியிருக்கின்றார். பிறன் யார் என்ப தையும் நல்ல சமாரியன் உவமை வழியாக விவரித்துக் கூறியிரு க்கின்றார். (லூக்கா 10: 29-37). அப்படியிருந்தும், தான் தன் பிறனுக்கு தன் வாழ்க்கையின் நல்ல மாற்றங்கள் வழியாக சாட்சியை காண்பிக் காமல், தன்னிடமிருந்த பழைய சுபாவமாகிய அகங்காரத்தின் வலி மையை காண்பித்ததையிட்டு மனம் வருந்தினான். ஆம் பிரியமான சகோதர சகோதரிகளே, நாம் ஆண்டவராகிய இயேசுவின் பாதுகாவல ர்கள் அல்ல. அவர் சர்வ வல்லமையுள்ள தேவன். மாறாக நாம் அவரு டைய சீஷர்களாக இருக்கின்றோம். எனவே அவருடைய சுபாவங்களை வெளிக்காட்டும் சாட்சிகளாக வாழ வேண்டும். இந்த உலகிலே நாமும் அறியாமையிலே வாழ்ந்த நாட்கள் உண்டு. தேவ கிருபை வெளிப்பட்ட போது, பிரகாசமுள்ள மனக்கண்களை பெற்றுக் கொண்டோம். நம்மு டைய சாட்சியான வாழ்க்கை வழியாக மற்றவர்களும் இயேசுவை நம் மில் கண்டு கொள்ளும்படியாக, புதிய மனுஷனுக்குரிய சாந்த குண த்தை நாம் காண்பிக்கின்றவர்களாக வாழ வேண்டும்.

**பிலிப்பியர் 4:5**

**உங்கள் சாந்தகுணம் எல்லா மனுஷருக்கும் தெரிந்திருப் பதாக. கர்த்தர் சமீபமாயிரு க்கிறார்.**

**ஜெபம்:** நீடிய பொறுமையுள்ள தேவனே, புறம்பேயிருக்கிறவர்களுக்கு முன்பாக ஞானமாய் நடந்து, காலத்தைப் பிரயோஜனப்படுத்திக்கொள்ள எனக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்து வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.